Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx. Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone shop 259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். T.P: 021 222 7835 Fax:021 222 7836
பலநோக்கு கூ. ச. முன்பாக 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் T.P: 021 222 7560 Fax:021 222 7310
E.mail:thirumurugan5@lycosmail.com

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 18 (06.08.2004) வெள்ளிக்கிழமை இதழ்:308

# குடாநாட்டுப் பாதுகாப்பு நிலைவரம்;
# அமெரிக்க தளபதி நேரில் ஆராய்வு!

## முகமாலை காவலரண்களுக்கும் விஜயம்

(யாழ்ப்பாணம்)

**அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி லெப்.ஜெனரல் வலஸ் கி.கிறேக்சன் நேற்று யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்து இங்குள்ள பாதுகாப்பு நிலைமைகள் குறித்து நேரில் ஆராய்ந்தார்.**

**விமானப்படை விமானம் மூலமாக பலாலி விமான நிலையத்தை நேற்றுக்காலை வந்தடைந்த அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் பிராந்திய தளபதி லெப்.ஜெனரல் வலஸ் கி.கிறேக்சனை யாழ்.குடாநாட்டுக்கான இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால வரவேற்றார்.**



இதன் பின்னர் பலாலி இராணுவத தலைமையகத்தில் மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவுக்கும், லெப். ஜெனரல் வலஸ் சி.கிறேக்சனுக்கும் இடையில் முக்கிய பேச்சுக்கள் இடம பெற்றன.

இதன்போது - யாழ்.குடாநாட்டில் பாதுகாப்பு நிலைமைகள் குறித்தே அதிக கவனம் செலுத்தப்பட்டதாக தெரியவருகிறது. அத்துடன், பலாலிப் படைத்தளத்தில் உயர்மட்ட இராணுவ அதிகாரிகளுடனான கூட்டமொன்றிலும் அமெ

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேச ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவிக்காதாம்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையின் அடிப்படையில் - சமாதானப் பேச்சுக்களை நடத்தவும், இதற்கு நோர்வேயின் அனுசரணையைப் பெறுவதற்கும் ஜே.வி.பி கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளது.

முடங்கிப் போயுள்ள சமாதானப் பேச்சுக்களை தொடர்வதற்கும், தற்காலிகமாகத் தாம் விலகிக்கொள்வதாக அறிவித்த நோர்வே அனுசரணையாளர்கள் தமது பணியை மீண்டும் தொடர்வதற்கும் வழிகோலலாம் என எதிர்பார்க்கப்படும் ஜே.வி.பியின் இந்தத் திடீர் அறிவிப்பு, கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பை உருவாக்கியுள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ஜே.வி.பி உறுப்பினரும், நிலவள அமைச்சருமான அநுரதிஸநாயக்க,

நாட்டின் அரசியற் சூழ்நிலைக்கேற்ப முடிவுகளை மாற்றிக்கொள்வது அரசியற் கட்சிகளின் தேவையாகவுள்ளது. இடைக்காலத் தன்னாட்சி அலகின் கீழ் பேச்சு நடத்தத் தற்போது ஜே.வி.பி இணக்கம் தெரிவித்துள்ளது. இருப்பினும், இந்தப் பேச்சுக்கள் இனப்பிரச்சினைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பால்மாவின் விலை சில நாட்களில் உயரும்

(கொழும்பு)

பால்மாவின் விலையை ரூபா 14.50 சதத்தால் அதிகரிப்பதற்கு, பால்மா நிறுவனம் - பாவனையாளர் சேவை அதிகார சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

உலக சந்தையில் டொலரின் பெறுமதி அதிகரித்த காரணத்தாலேயே பால்மாவின் விலையை அதிகரிக்கவேண்டியுள்ளதாக பால்மா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்தில் சிவாஜிலிங்கத்தை தாக்குவதற்கு மேர்வின் சில்வா முயற்சி!

### கருணா விவகாரத்தால் பெரும் அமளி துமளி

(கொழும்பு)

நாடாளுமன்றம் நேற்றுக் கூடிய போது - கருணா விவகாரத்தால் அமளி துமளி ஏற்பட்டு அமர்வுகள் சில நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் சுற்றுலாத் துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க ஆற்றிய உரையின் போதே- கூச்சல் குழப்பநிலை ஏற்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவை சிங்கப்பூருக்கு தான் அழைத்து சென்றதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்த கருத்தினைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும், உண்மைக்குப் புறம்பான இந்தக் கூற்றினால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பிரதேசத்துக்கு சென்றும் பேச்சு நடத்த படைத்தரப்புத் தயார்!

### கண்காணிப்புக் குழு ஊடாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் சென்று, அவர்களுடன் சந்திப்புக்களை நடத்துவதற்கு தாம் தயாராகவிருப்பதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் இராணுவத்தரப்புத் தெரிவித்துள்ளது.

படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் தொடர்ச்சியான தாக்குதல்களை அடுத்து கிழக்கில் படையினருடனான மாதாந்த சந்திப்புக்களை இடைநிறுத்திக் கொள்வதாக தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னர் அறிவித்திருந்தனர்.

விடுதலைப்புலிகளின் இந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீட்டின் மீது கிரனைட் தாக்குதல்: பொலனறுவையில் இளைஞர் பலி!

(பொலநறுவை)

பொலனறுவை மாவட்டத்திலுள்ள வெலிகந்தப் பகுதியில் வீடொன்றின் மீது நடத்தப்பட்ட கிரனைட் தாக்குதலில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

வெலிகந்தவிலுள்ள - கரபொல - செவனபிட்டிய பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றது. நேற்று அதிகாலை 3 மணிக்கு வீடொன்றின் மீது இனம் தெரியாத நபர்கள் கிரனைட்டை வீசியபோதே அதனுள் இருந்த இளைஞர் பலியானார்.

குணரட்ணம் தவேந்திரன் (வயது 26) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். இவர் கருணா குழுவுடன் தொடர்புடையவராக இருக்கலாமென சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## கூட்டணியின் தலைமையை ஏற்க அநுரா விருப்பம் தெரிவிப்பு!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவிப் பதவியிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து, அவரது சகோதரரும், உல்லாசத்துறை அமைச்சருமான அநுரா பண்டாரநாயக்க, கட்சித் தலைமைப் பதவியை ஏற்றுக் கொள்ளத் தாம் தயாராக இருப்பதாக பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

கட்சி அங்கத்தவர்கள் இணக்கம் தெரிவிக்கும் பட்சத்தில், கூட்டணிக் கட்சியின் தலைவராகப் பணியாற்ற அநுரா விருப்பம் தெரிவித்துள்ளார். சுட்டணிக் கட்சிகளுக்கிடையில் சில கருத்துவேற்றுமைகள் இருப்பதை ஏற்றுக் கொண்டபோதும், அவற்றை தான் தலைவராக வந்தால், உடனடியாகச் சரிசெய்து விட தன்னால் முடியும் என்றும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானம், அபிவிருத்திப் பணிகளில் முழுமையாக ஈடுபடுவதற்கே சந்திரிகா பதவி விலகினாராம்!

### மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்திப் பணிகளிலும், சமாதான நடவடிக்கைகளிலும் முழுமையான நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்காகவே - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியில் இருந்து விலகிக்கொண்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலே அமைச்சரவைப் பேச்சாளர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் -

இந்த நாட்டின் மக்கள் ஜனா

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# வடமராட்சி வலயமட்ட பாடசாலைகளின் ஆங்கில தினப் போட்டிகளின் முடிவுகள்

வடமராட்சி வலயமட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட வாய்மொழி மூலமான ஆங்கில தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு:

**தரம் - 03**

முதலாம் இடம் - கே.அபிரா (நெல்லியடி மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை).

இரண்டாம் இடம் - எ.அஜிதா (நெல்லியடி மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை).

மூன்றாம் இடம் - ஜே.கபிலானந் (தும்பசிட்டி மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை).

**தரம் - 04**

முதலாம் இடம் - என்.சாமந்தி (நெல்லியடி மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை).

இரண்டாம் இடம் - ரி.கோகுலன் (மாணிக்கவாசகர் வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - எஸ்.சிவதர்சிகா (வட.இந்து மகளிர் கல்லூரி), எஸ். பகிரதி (வட.இந்து மகளிர் கல்லூரி).

**தரம் - 05**

முதலாம் இடம் - எஸ்.சகீர்த்தியா (நெல்லியடி மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை).

இரண்டாம் இடம் - எஸ்.நாவினா (நெல்லியடி மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை).

மூன்றாம் இடம் - கே.சுகீர்தனா (வட.இந்து மகளிர் கல்லூரி).

**தரம் - 06**

முதலாம் இடம் - பி.ஆரணி (மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை).

இரண்டாம் இடம் - ஆர்.அகிலா (மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை).

மூன்றாம் இடம் - எஸ்.கோபிகா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**தரம் - 07**

முதலாம் இடம் - பி.அபிதா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - அருள்னீலா (வட.இந்து மகளிர் கல்லூரி).

மூன்றாம இடம் - ஜே.சப்திகா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**தரம் - 08**

முதலாம் இடம் - பி.மதுரா (மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை).

இரண்டாம் இடம் - கே.கௌதமி (மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை).

மூன்றாம் இடம் - பி.மயூரி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

**தரம் - 10**

முதலாம் இடம் - எஸ்.கலைச்செல்வி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ரி.கிரிசாந்தி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

மூன்றாம் இடம் - எம்.சர்மினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ஆர். மோகனப்பிரியன் (ஹாட்லிக் கல்லூரி).

**தரம் - 11**

முதலாம் இடம் - கௌசியந்தி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - எல்.நித்தியா (மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை).

மூன்றாம் இடம் - எஸ்.மகலின் சாந்தி (மருதங்கேணி உயர் தமிழ்க் கலவன் பாடசாலை).

**தரம் - 12**

முதலாம் இடம் - வை.யோகினி (மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை).

இரண்டாம் இடம் - கே.பிரமிளா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

மூன்றாம் இடம் - பி.மீரா சாந்தி (மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை).

**தரம் - 12**

முதலாம் இடம் - ஆர்.ரத்னதேவி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - கே. கலைச்செல்வி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

மூன்றாம் இடம் - எ.அன்ரனி ஜெசிக்கா (மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை).

**தரம் - 12**

முதலாம் இடம் - வை.யோகினி (மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை).

**தரம் - 13**

முதலாம் இடம் - த.சியாமிளா (மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை). (12)

# அன்னதான மண்டபம் நெடுந்தீவில் அமைப்பு

நெடுந்தீவு மேற்கு நெழுவினி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் அன்னதான சபையினர், அன்னதான மண்டபம் ஒன்றை அமைத்து வருகின்றனர்.

120 அடி நீளமான இந்த அன்னதானச்சபை மண்டபத்தில் - கல்யாண மண்டபம், கலையரங்கு மற்றும் பொதுநிகழ்வுகள் மண்டபம் எனப்பல அம்சங்களை உள்ளடக்கியதாக ஒரே மண்டபமாகக் கட்டப்பட்டு வருகின்றது.

இந்த மண்டபத்துக்கான அமைப்பு வேலைகளுக்கென நலன்விரும்பிகளின் நிதியே பயன்படுத்தப்பட்டு, வேலைகள் இடம்பெற்று வருவதாகவும், மேலும் பல வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதனால், நலன் விரும்பிகள் இதற்கென நிதி உதவி மற்றும் பொருள் உதவிகளை வழங்கி, வேலைகள் துரிதமாக முடிவுபெற ஒத்துழைப்பு வழங்குமாறு அன்னதானசபையின் தலைவர் ந.நடராசா கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## கொழும்பு செல்கிறது ஹொக்கி அணி

யாழ்.மாவட்ட ஹொக்கி அணி இன்று கொழும்பு செல்கின்றது. இதில், யாழ்.மாவட்டத்திலுள்ள ஹொக்கி விளையாடும் கழகங்களில் இருந்து அணிவீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சி கடந்த வாரங்களில் நடைபெற்று, பயிற்சிக்குச் சமுகமளிததோர் இன்று புறப்படுகின்றனர்.

## உதவி மாவட்ட செயலர் நியமனம்

யாழ்.மாவட்டத்தின் உதவி மாவட்டச்செயலராக கே.கனகரத்தினம் கடந்த 2 ஆம் திகதிமுதல் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கரவெட்டிப்பிரதேச செயலராகக் கடமையாற்றிய இவர், கடந்த 30 வருடங்களுக்குமேல் அரசதுறையில் பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.


தமிழர் புனர்வாழ்வுக்கழக முகாமைத்துவக் கல்லூரியில் வெகுவிரைவில் ஆரம்பமாகின்றது AAT கற்கை நெறி

எதிர்காலத்தை ஒளிமயமாக்க ஒரேவழி தொழில்வாய்ப்பைப்பெற தகுந்த பாடநெறி AAT கற்கை நெறி

இக்கற்கை நெறி கீழ்வரும் 4 பாடங்களைக் கொண்டுள்ளது

- ☑ அடிப்படைக் கணக்கியல்
- ☑ வியாபாரக்கணிதமும் புள்ளிவிபரவியலும்
- ☑ பொருளியலும் வர்த்தகமும்
- ☑ கணக்காய்வு

வன்னி மண்ணில் முதல்தடவையாக உருவாகும் AAT கற்கைநெறியைக் கற்றுப் பயன்பெற அரியவாய்ப்பு

- மிகக் குறைந்த கட்டணம்
- O/L ,A/L தராதரத்துடன் கற்கும் வாய்ப்பு
- தமிழ், ஆங்கிலம் இருமொழிகளிலும் விரிவுரைகள்
- வன்னி மண்ணிலேயே பரீட்சைகள்

விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
விண்ணப்ப முடிவுத்திகதி 01.10.2004
விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி
AAT கற்கை நெறி
முகாமைத்துவக்கல்லூரி
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்
முதன்மைச் செயலகம்
கிளிநொச்சி.

விண்ணப்பப் படிவங்களுக்கும், மேலதிக விபரங்களுக்கும் த.பு.க முதன்மைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளவும்
சிறிஸ்குமார்
T.P : 021 228 - 3947
Fax : 021 228 - 5955

(C/2916)


# வர்த்தக டிப்ளோமாதாரிகள் யாழ்.செயலகம் முன் திங்களன்று மறியல்

பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பில் உயர் தேசிய கணக்கியல், வர்த்தக டிப்ளோமாதாரிகள் புறக்கணிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், கணக்கியல் மற்றும் வர்த்தக டிப்ளோமாதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கவேண்டுமெனக்கோரியும் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ். செயலகம் முன்பாக மறியற்போராட்டம் இடம்பெறவுள்ளது.

அண்மையில் பட்டதாரிகளது நியமனங்கள் தொடர்பாக, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் உரையாடிய நிதியமைச்சர் சரத் அமுனுகம, பட்டதாரிகள் நியமனங்களின்போது, டிப்ளோமாதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படமாட்டாதெனத் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, நேற்று யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் இடம்பெற்ற கணக்கியல் மற்றும் வர்த்தக டிப்ளோமாதாரிகள் சங்கக் கூட்டத்தில் - டிப்ளோமாதாரிகளுக்கும், பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும்போது -

வேலைவாய்ப்பு வழங்கப்படவேண்டுமெனக்கோரி எதிர்வரும் திங்கட்கிழமை யாழ். செலகம் முன்பாக அடையாள மறியற்போராட்டத்தினை நடத்தத்தீர்மானித்துள்ளது.

# விண்ணப்பங்களை அனுப்பத்தவறிய வேலையற்ற பட்டதாரிகள் இம் மாதம் 31ந்குள் அனுப்பலாம்

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகளை அரசசேவையில் உள்வாங்குவதற்கான விண்ணப்பங்களை அனுப்பத்தவறிய பட்டதாரிகள் இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன் தமது பிரதேச செயலகங்களினூடாக விண்ணப்பங்களை அனுப்ப முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 3 ஆம் திகதி நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவை சந்தித்தபோதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பட்டதாரிகளுக்கும் தொழில் வழங்கும் திட்டத்திற்கமையவே, இவ்வாறு விண்ணப்பிக்காதவர்களிடமும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# விபத்துடன் தொடர்புடைய வாகன உரிமையாளருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மாதா கோவில் முன்றலில் இடம்பெற்ற விபத்துக்குக் காரணமான ஹன்ரர் வாகனத்தின் உரிமையாளருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்மைக்குக் காரணமான, மணல் ஏற்றி வந்த ஹன்ரரின் உரிமையாளர் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது- யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா அவரை மூன்று லட்சம் ரூபா ஆட்பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

இந்த விபத்தில் சைக்கிளில் சென்ற ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த விபத்து இடம்பெற்றபோது, ஹன்ரரில் பயணித்த ஒருவரும். அதன் சாரதியும் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்படடுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

## வருடாந்த மஹோற்சவம்

சாவகச்சேரி துர்க்காதேவி தேவஸதானத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றமும், எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் 31 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை (ஆடி அமாவாசைதினம்) காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## வடமராட்சிப் பகுதியில் பண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் நடாத்தப்படும் வடமராட்சிப் பிரதேசத்துக்கான பண்ணிசை வகுப்பு ஆரம்ப நிகழ்வு இன்று நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் ஆலயத்தில் பி.ப 4.00 மணிக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில், நெல்லியடி முருகன் ஆலய பிரதமகுரு பிரமஸ்ரீ கௌரிபால குருக்கள் ஆசியுரையினையும், பருத்தித்துறை கலாசார உத்தியோகத்தர் விஜயரத்தினம் வரவேற்புரையினையும், கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், பருத்தித்துறை பிரதேச செயலர் க. வசந்தகுமார் ஆகியோர் வாழ்த்துரைகளையும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் செ.சேது ராஜா தொடக்கவுரையையும் நிகழ்த்தவுள்ளார்.

## பயிற்சிவகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

எழுதுவினைஞர் தரம் II 'அ' வினைத திறமைக்கான தடைப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் நாளை முதல் சனி, ஞாயிறு ஆகிய விடுமுறை தினங்களில் யாழ் கல்வி வலயத்துடன் அமைந்துள்ள சாதனா பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பயிற்சி வகுப்புக்கள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் பொதுச்செயலாளர் செ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். மேற்படி பரீட்சைக்கான பயிற்சி வகுப்பு உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


நிறஞ்சனாஸ் சங்கானை
நந்தா, ரேகா, வடிவேல் நடித்த
புன்னகைப் பூவே
காட்சி நேரம்:11.00. 2.45. 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) Saving Private Ryan
(ச-2723)

நாகம்ஸ் சுன்னாகம்

ரஜினிகாந்த், நக்மா, ரகுவரன், ஜனகராஜ் நடித்த
பாட்ஷா
அடுத்த வெளியீடு மானஸ்தன்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
இன்று முதல்
சிம்பு, ரம்யாகிருஷ்ணன், மற்றும் மும்தாஜ் நடித்த


குத்து
சில தினங்கள் மட்டும்
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

# ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு புதிய ஆணையாளர் நியமனம்!

ஆட்பதிவுத் திணைக்களத்தின் புதிய ஆணையாளராக பி.வி. அபயக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார். தொழில் அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளராக பணியாற்றி வந்த இவர் கடந்த 3 ஆம் திகதி முதல் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் தர அதிகாரியான இவர் 22 வருடங்கள் அரச சேவையில் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை ஆட்பதிவுத் திணைகக்ளத்தில் இடம்பெற்றதாகக் கருதப்படும் மோசடிகள் குறித்து முன்னாள் ஆட்பதிவுத் திணைககள அதிகாரியிடம் கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பணம்பெற்றுவிட்டுச் சிலருக்கு போலி அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டமை தொடர்பாகவே விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக அந்த அதிகாரியிடம் மீண்டும் விசாரணைகள் நடத்தவிருப்பதாகவும் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது ஒரு சில தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது. (தே)

# அனைத்து தொழிற்சங்கங்களுடனும் ஜனாதிபதி இன்று சந்திக்க ஏற்பாடு!



(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலங்கையிலுள்ள அனைத்து தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இன்று நடைபெறவுள்ள இந்தச் சந்திப்புக்கான அழைப்புக் கடிதங்கள் இலங்கையில் உள்ள அனைத்துத் தொழிற்சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையிலுள்ள தொழிற்சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் பல்வேறு குறைபாடுகள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர், முதற்தடவையாக இந்தச் சந்திப்பு இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

# மெய்வல்லுநர் சம்மேளனம் அரசாங்கத்தால் கலைப்பு!

(கொழும்பு)

தேசிய மெய்வல்லுநர் சம்மேளனத்தை அரசாங்கம் கலைத்துள்ளது.

சம்மேளனம் தொடர்பாக எழுந்த குற்றச்சாட்டுக்களை அடுத்து, அதற்கென அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின்படி இந்தக் கலைப்பு இடம்பெற்றது.

இந்த நிலையில் சம்மேளனத்துக்குப் பதிலாக தற்சமயம் இடைக்கால சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் தலைவராக முன்னர் மெய்வல்லுநர் சம்மேளனத்தின் தலைவராக இருந்த பி.எச்.டி.வைத்திய திலக நியமிக்கப்பட்டுள்ளார்.

## இடைக்கால நிர்வாக யோசனைப்படி

# பேச்சுக்களை ஆரம்பிக்காவிடின் யுத்தத்துக்கே வழிவகுக்கும்!

## நாடாளுமன்றில் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில், பேச்சுவார்த்தை நடத்தத் தயாரில்லை என்றால், அது யுத்தம் ஒன்றுக்கே வழிவகுக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் எச்சரித்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் - தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தை நடத்துமானால், மாத்திரமே தமிழர்கள் ஐக்கிய இலங்கைக்குள் வாழமுடியும்.

இல்லையேல் மாற்று வழியாக ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக்கொள்ளும். விடுதலை பெற்ற சுதந்திர தமிழர் ராஜ்ஜியத்தில் புலிக்கொடியின் கீழ் தமிழர்கள் வாழும் நிலை ஏற்படும்.

ஜே.வி.பி இந்த நாட்டில் யுத்தம் ஒன்றை ஏற்படுத்த முயற்சிக்கிறது. இந்த நிலையில் ஜனாதிபதி இடைக்கால நிர்வாக யோசனையை அடிப்படையாகக்கொண்டு, பேச்சுவார்த்தை நடத்தப்போவதில்லை எனக் கூறியிருப்பதாக வெளியான தகவல் தமிழர்களை இந்த நாட்டின் அரசாங்கம் ஏமாற்றும் செயலில் ஈடுபட்டுள்ளதையே காட்டி நிற்கிறது எனவும் குறிப்பிட்டார். (01)



# இடைக்கால நிர்வாக கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துவிட முடியாது!

## பேராசிரியர் ஆரியரத்ன தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் வலியுறுத்தும் இடைக்கால நிர்வாக சபை கோரிக்கையை அரசு முற்றிலுமாக புறக்கணித்து விடமுடியாது என்று மூத்த வரலாற்றுப் பேராசிரியர் ஆர்.ஏ.ஆரியரத்ன தெரிவித்தார்.

'ராஜீய ஆய்வு மண்டல நிலையம்' என்ற அமைப்பின் நிறுவனராக உள்ள அவர் இலங்கை அகதிகள் புனர்வாழ்வு தொடர்பான பணிகளுக்காகத் தமிழகம் சென்றுள்ளார்.

அங்கு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக - பேச்சுவார்த்தைக்கு இடைக்கால நிர்வாகசபைக் கோரிக்கையை நிபந்தனையாக விடுதலைப் புலிகள் வைத்துள்ளனர்.

தங்களது கோரிக்கை புறக்கணிக்கப்பட்டால் புலிகள் மீண்டும் போருக்குத் தயாராகும் அபாயமுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் இடைக்கால நிர்வாக கோரிககையை ஒரேயடியாக நிராகரித்துவிடமுடியாது. இலங்கையின் பாதுகாப்பு என்பது, போரில்லாத பாதுகாப்புச் சூழ்நிலை மட்டுமல்ல, குடிமக்களின் 'சிவில் உரிமைகளின்' பாதுகாப்பும் மிக முக்கியம்.

உள்நாட்டுப் போரினால் இலங்கையிலிருந்து வெளியேறி இந்தியா உள்ளிட்ட நாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்தவர்கள் ஒரு புறம். அதைப்போல் இலங்கையில் பாதுகாப்புத் தேடி வேறிடத்தில் குடியேறியவர்கள் இன்னொருபுறம். இரு தரப்பினருக்கும் பாதுகாப்பான வாழ்க்கை முக்கியம்.

இலங்கையிலேயே தங்களது இடத்திலிருந்து வெளியேறி வேறிடத்தில் குடியேறியவர்களுக்கு வாக்குரிமை, கல்வி, வேலைவாய்ப்புக்களில் முன்னுரிமை தேவை.

இவை குடிமக்களின் அடிப்படை உரிமைகள். அதைத் தீர்க்க இலங்கை அரசிடம் எங்களது நிலையம் வலியுறுத்திவருகிறது. அதைப்போல் இந்தியாவில் குடியேறிய இலங்கை அகதிகள் இங்கேயே நிரந்தரமாகத் தங்க விரும்பினால் அதற்கும் இந்திய, இலங்கை அரசுகள் துணைபுரியவேண்டும். இலங்கையில் மீண்டும் ஒரு உள்நாட்டுப்போர் மூளவதை எந்தத் தரப்பினரும் விரும்பவில்லை.

ஆளும் சந்திரிகா கூட்டணிக்கும், எதிர்க்கட்சியான ரணில் விக்கிரமசிங்க கூட்டணிக்கும் அடிப்படைக்கொள்கையளவில் பெரிய வேறுபாடு எதுவுமில்லை.

இலங்கையில் மீண்டும் ஒரு உள்நாட்டுப்போர் மூளுமா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. எனினும், அவற்றையெல்லாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# புல்லுமலை, கித்துள் கிராமங்களில் புலிகளின் எழுச்சிக் கருத்தரங்குகள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சிக் கருத்தரங்கு குடும்பிமலைக கோட்டத்தின் எல்லைக் கிராமமான புல்லுமலையில் நடைபெற்றது.

குடும்பிமலைக் கோட்ட அரசியற் பொறுப்பாளர் எஸ்.புகழன் ஏற்பாட்டில நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் -

மட்டு.அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், மட்டு. அம்பாறை இராணுவத் தளபதி பிரபா, மட்டு. அம்பாறை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் குவேனி ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

மட்டு. அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உரையாற்றுகையில் -

இந்தக் கிராமம் பலமுறை இராணுவத்தினராலும், விசேட அதிரடிப்படையினராலும், சிங்கள ஆக்கிரமிப்பாளர்களாலும் பாதிக்கப்பட்ட எல்லைக் கிராமமாகும்.

தற்பொழுது நீங்கள் மீள் குடியேறி இருக்கிறீர்கள். இன்று நீங்கள் உங்களது பொருளாதாரத்தையும், பிள்ளைகளின் கல்வியையும் கட்டியெழுப்ப வேண்டும்.

இந்தக் கிராம நிலப்பரப்பில் ஒரு அங்குலமேனும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு விட்டுக்கொடுக்கக்கூடாது. அத்துடன், எமது தேசியத்தைக் கட்டியெழுப்பி எமது விடுதலையை வென்றெடுக்க வேண்டுமெனவும் கூறினார்.

மட்டு. அம்பாறை மாவட்டத் தளபதி பிரபா கலந்து பேசும்போது-

நாம் உங்களின் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், குடிநீர் ஆகியவற்றில் அக்கறை கொண்டுள்ளோம். இவற்றை நாங்கள் கருத்தில் கொண்டு வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களுடனும், உள்நாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களுடனும் அபிவிருத்தித் திட்டங்களை அவர்களது நிதியுதவியுடன் முன்னெடுக்கும்படி கூறியுள்ளோம்.

எமது பகுதியில் ஆயுதங்களுடன் நடமாடுபவர்களையும், சட்டவிரோத ஆயுதங்களையும், வெடிபொருட்களையும் வைத்திருப்பவர்களை இனங்கண்டு, ஏற்படும் பல பிரச்சினைகளை முளையிலேயே கிள்ளியெறியலாம். எனவே, தேசியத்தை நேசிக்கும் அனைவரும் எமக்கும் பூரண ஒத்துழைப்பை நல்கி எமது தாயகத்தை மீட்டெடுப்போம் என்றும் கூறினார்.

மட்டு. அம்பாறை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் குவேனி கலந்துகொண்டு பேசுகையில் -

நாம் எமது பாரம்பரியத்துக்கமைய கலை, கலாசார விழுமியங்களைக் கட்டிக்காத்து, எமது குடும்பங்களை வழிநடத்தி, எமது பிள்ளைகளையும் வளர்க்க வேண்டும்.

எமது விடுதலைக்காக பெண்களாகிய நாம் பல தியாகங்களைச் செய்துள்ளோம். எனவே, நாம் ஒவ்வொருவரும் எமது விடுதலைக்காக பல தியாகங்களைச் செய்யவேண்டுமெனவும் கூறினார்.

இந்தக் கருத்தரங்குக்கு மட்டு. அம்பாறை நிர்வாக சேவைப் பொறுப்பாளர் தயாமோகன், மட்டு. அம்பாறை பொருண்மியப் பொறுப்பாளர் சலீம், மட்டு. அம்பாறை மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், மட்டு. அம்பாறை மாவட்ட கல்விப் பொறுப்பாளர் விமல்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். இது போன்ற எழுச்சிக் கருத்தரங்குகள் மட்டு.அம்பாறை மாவட்டக் கிராமங்கள் தோறும் நடைபெறவுள்ளன.

## ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய நிறைவேற்றுக்குழு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய நிறைவேற்றுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்ற நிறைவேற்றுக்குழுக் கூடடத்தின்போதே இந்தத் தெரிவு இடம்பெற்றது.

மிலிந்த மொறகொட, ஹேமகுமார நாணயக்கார, கெஹிலிய ரம்புக்வெல்ல, கபீர் ஹாஸீம் ஆகியோரே நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சபாநாயகராக டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நிறைவேற்றுக் குழுவில் இருந்து அவர் விலகிக் கொண்டார்.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா இவர் சார்பாக நிறைவேற்றுக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளதுடன், புதிய செயலாளர் நாயகமாக என்.வீ.கே.கே.வேரகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

# நடேசன் கொலையாளிகள் இனங்காணப்பட்டனர்!

(கொழும்பு)

நாட்டுப்பற்றாளரும், ஊடகவியலாளருமான ஐயாத்துரை நடேசன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

கருணா குழுவைச் சேர்ந்த பாரதி மற்றும் ஜெயக்குமார் அல்லது ஜெயந்தன் ஆகியோரே ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனைச் சுட்டுக்கொன்றதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளர் பசீர் சேகுதாவூத் மற்றும் அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினராக நிஜாமுதீன் ஆகியோரைக் கருணா குழுவினர் கொலைசெய்துவிட்டு, விடுதலைப் புலிகளின் மீது குற்றஞ்சாட்டப் போடப்பட்ட திட்டம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இதனூடாகத் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே இனமோதலை உருவாக்குவதற்கும், முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காகவும் தனது சகாக்களுக்கு கருணா இந்த உத்தரவை வழங்கி இருந்ததாகக் கூறப்படுகிறது.

# அரசாங்கம் தூய கொள்கையுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும்

## ஐ.தே.கட்சி கோரிக்கை

அரசாங்கம் தூய கொள்கையுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் சமாதான முன்னெடுப்புகள் தொடர்பான தமது கொள்கை விளக்கத்துக்காக, ஐக்கிய தேசிய கட்சி செய்தியாளர் மாநாடு ஒன்றைக் கூட்டியது. இதில் கருத்து வெளியிட்ட கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் -

ஐக்கிய தேசியக் கட்சி முற்று முழுதாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சிக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும், அதனை மையமாகக் கொண்டு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தாம் தயாராக உள்ளோம்.

அரசாங்கம் நாட்டின் ஜீவனோபாயப் பழுவைக் குறைக்க உரிய நடவடிக்கை எடுக்குமானால், அதற்கு ஐ.தே.கட்சி ஆதரவு அளிக்கும். டோக்கியோ நிதியுதவியான 4.5 பில்லியன் டொலர் சமாதான முன்னெடுப்புகள் தாமதமாவதால், நாட்டுக்குக் கிடைக்காமல் போகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (01)

தென்னாபிரிக்காவுடனான

# முதல் இனிங்ஸில் இலங்கை 486 ஓட்டங்கள் குவிப்பு!



தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று மஹேலவின் இரட்டைச் சதத்துடன் இலங்கை அணி 486 ஓட்டங்களைக் குவித்துள்ளது.

நேற்றையதினம் இரண்டாவது நாள் ஆட்டம் ஆரம்பமாகியவேளையில் 116 ஓட்டங்களைப் பெற்றிருந்த மஹேல ஜெயவர்த்தனவுடன் புதிய துடுப்பாட்ட வீரராக சமிந்த வாஸ் இணைந்துகொண்டார்.

எட்டாவது விக்கெட்டுக்காக இணைந்துகொண்ட மஹேல ஜெயவர்த்தன சமிந்த வாஸ் ஆகிய இருவரும் இணைப் பாட்டமாக 170 ஓட்டங்களைப்பெற்று இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் புதியதொரு சாதனை படைத்துள்ளனர்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 449 ஆக இருந்தபோது சமிந்த வாஸ் 69 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நிக்கி போஜே வீசிய பந்தில் ஹேவாட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

141 பந்துகளை எதிர்கொண்ட சமிந்த வாஸ் 10 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 69 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஆடுகளம் வந்த ம.்.றூப்புடன் இணைந்து ஆட்டத்தை ஆரம்பித்த மஹேல ஜெயவர்த்தன இலங்கை அணி 486 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளையில் ஹேவாட்டின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இவர் 415 பந்துகளைச் சந்தித்து 25 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக 237 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். இது மஹேலவின் இரண்டாவது இரட்டைச் சதமாகும்.

தொடர்ந்து ம.்.றூப்புடன் இணைந்து துடுப்பெடுத்தாட வந்த முத்தையா முரளிதரன் வந்தவேகத்தில் பவிலியன் திரும்பினார்.

இவர் தான் எதிர்கொண்ட முதலாவது பந்திலேயே ஹேவாட்டின் பந்தில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் ம.்.றூப்



6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தார்.

ஆட்டமுடிவில் இலங்கை அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 486 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் 19 ஓட்டங்கள் உதிரி ஓட்டங்களாகும்.

பந்துவீச்சில் பொலக் 48 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக் களையும், என்ரினி 61 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், ஹேவாட் 81 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், நிக்கி போஜே 148 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து தனது முதலாவது



இனிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி நேற்றைய ஆட்டநேர முடிவின்போது விக்கெட் இழப்பின்றி 82 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான டிப்பென்னர் 5 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 46 ஓட்டங்களுடனும், ஜார்ஸ்வெல்ட் 4 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 30 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

# தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கு இந்திய வீராங்கனை நீந்தத் திட்டம்!

அர்ஜுன விருது பெற்ற ஆசிய நீச்சல் வீராங்கனை பூலா சௌத்ரி சக்ரவர்த்தி (வயது 45) எதிர்வரும் 20 ஆம் திகதி தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடிக்கு நீந்திச் செல்லவுள்ளார்.

தலைமன்னாரில் காலை 4 மணிக்கு நீந்தத் தொடங்கும் அவர், மாலை 4 மணிக்கு தனுஷ்கோடி சென்றடையத் திட்டமிட்டுள்ளார். இந்த இரு இடங்களுக்கும் இடைப்பட்ட தூரம் 32 கி.மீ ஆகும்.

அவருடன் நீச்சல் வீரர்கள் சஞ்சிப் சக்ரவர்த்தி, சர்போத் சக்ரவர்த்தி உள்ளிட்ட பிரபல நீச்சல் வீரர், வீராங்கனைளும் நீந்திச்செல்லவுள்ளனர்.

இந்திய கடல் எல்லை வரை இலங்கை கடற்படைக் கப்பலும், இந்திய கடல் எல்லையில் இருந்து தனுஷ்கோடி வரை இந்திய கடலோர காவற்படைக் கப்பலும் பாதுகாப்பு அளிக்கவுள்ளன.

******** இன்னும் 07 நாட்களில் *******




# உதைபந்தாட்ட வரிசை பிரேசில் முதலிடத்தில்!

(லண்டன்)

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனமும், நாடுகளின் வரிசைப்பட்டியலை வெளியிட்டுள்ளது. அதன்படி பிரேசில் 849 புள்ளிகள் பெற்று தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது.

பிரான்ஸ் 809 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்திலும், ஸ்பெயின் 790 புள்ளிகள் பெற்று 3 ஆவது இடத்திலும் உள்ளன.

ஆர்ஜென்ரீனா 4 ஆவது இடத்திலும், செக் குடியரசு 5 ஆவது இடத்திலும், ஹொலண்ட் 6 ஆவது இடத்திலும், இங்கிலாந்து 7 ஆவது இடத்திலும் உள்ளன.

# பெடரரின் தொடர் வெற்றி சாதனை; சுலோவாக்கிய வீரர் முறியடித்தார்!



(சின்சின்னாட்டி)

சின்சின்னாட்டி ரெனிஸ் போட்டியின் முதல் சுற்றிலேயே ரோஜர் பெடரர் தோல்வியடைந்ததன்மூலம் அவரது 23 போட்டிகளின் தொடர் வெற்றி சாதனை ஒரு முடிவுக்கு வந்துள்ளது.

ரெனிஸ் வீரர்களின் தரப்பட்டியலில் ஒற்றையர் பிரிவில் முதல்தர வீராகத் திகழ்பவர் ரோஜர் பெடரர். இவர் தொடர்ந்து 23 போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிபெற்றார்.

இன்னும் ஒரு போட்டியில் வெற்றி பெற்றிருந்தால், அமெரிக்க வீரர் பீட் சாம்ப்ராஸின் சாதனையைச் சமன் செய்திருப்பார். பீட் சாம்ப்ராஸ் 24 போட்டிகளில் தொடர்ந்து வெற்றி பெற்று சாதனை படைத்தார்.

சின்சின்னாட்டி போட்டியின் முதல் சுற்றிலேயே ஒற்றையர் பிரிவில் ரொஜர் பெடரர் அதிர்ச்சி தோல்வியடைந்தார். சுலோவாக்கிய வீரரான டொமினிக் ஹர்பாட்டி 1-6, 7-6(9:7), 6-4 என்ற செட் கணக்கில் பெடரரை வீழ்த்தினார்.

அத்துடன் பெடரர்- ஹாலே, விம்பிள்டன், கடாட் மற்றும் டொரண்டோ ஆகிய 4 பட்டங்களையும் தொடர்ந்து வெற்றிபெற்றிருக்கிறார். இந்தத் தோல்வியின் மூலம் இவரின் 5 ஆவது பட்ட சாதனையும் முடிவுக்குவந்தது.

இதற்கு முன்பு இங்கு நடைபெற்ற போட்டியில் 1994 ஆம் ஆண்டு மைக்கல் சாங்கும், 1996 ஆம் ஆண்டு அன்ட்ரே அகாசியும் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளனர். அதன்பின்பு பட்டம் வென்ற 3 ஆவது வீர் ரோஜர் பெடரர் ஆவார்.

ஏ.டி.பி ரெனிஸ் போட்டிகளின் தொடர் வரிசையில் இந்த சின்சின்னாட்டி போட்டி நடந்துவருகிறது. இதன் மொத்தப் பரிசுத்தொகை 2.4 மில்லியன் டொலர்களாகும்.

நேற்றுமுன்தினம் நடந்த மற்றொரு போட்டியில் முன்னணி வீரர்களில் ஒருவரான அன்டி ரொடிக் வெற்றிபெற்றார். இவர் தற்போதைய சம்பியனாவார்.

ரொடிக், மக்ஸ் மிர்னியுடன் மோதி 6-7(5:7), 7-5(7:5), 6-3 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றார். முன்னதாக ரொடிக் இந்தப் போட்டியில் வெற்றிபெற கடும் போராட்டத்தைச் சந்திக்கவேண்டியிருந்தது.




# சச்சின் களத்திலிருந்த வரை நெருக்கடியாகவே இருந்தது!

முரளிதரன் கூறுகிறார்



(கொழும்பு)

ஆசியக் கிண்ணத் தொடர் இலங்கை அணிக்கு ஒரு வெற்றித் தொடராகவே அமைந்துவிட்டது. தொடரின் தொடக்கத்தில் இருந்தே ஒவ்வொரு போட்டியிலும் இலங்கை வீரர்கள் மிகச்சிறப்பாக விளையாடினர்.

இந்த வெற்றியானது எங்கள் ஒற்றுமைக்குக் கிடைத்த வெற்றியாகவே கருதுகிறேன் என, சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எதிரான இறுதிப் போட்டியில் துடுப்பாட்டம், களத் தடுப்பு, பந்துவீச்சு என - அனைத்துத் துறைகளிலுமே இலங்கை அணி சிறந்து விளங்கியது.

228 ஓட்டங்களை மட்டுமே நாங்கள் எடுத்திருந்தபோதும், சீரான இடைவெளியில் இந்திய விக்கெட்டுக்களை வீழ்த்தியதன் மூலம் வெற்றி பெற்றோம்.

ஆனால், சச்சின் களத்தில் இருந்தவரை எங்களுக்கு மிகவும் நெருக்கடியாகவே இருந்தது.

எந்த நேரத்திலும் ஆட்டத்தின் போக்கை மாற்றக்கூடிய திறமை வாய்ந்தவர் சச்சின். அவரது விக்கெட் வீழ்ந்த பிறகே எங்களுக்கு நிம்மதியாக இருந்தது. இந்தத் தொடரில் குறிப்பிடத்தக்கவர் ஜெயசூர்யா.

இவர் தொடக்கப் போட்டிகளில் விரைவில் ஆட்டமிழந்தாலும், முக்கியமான போட்டிகளில் அணியின் வெற்றிக்கு அதிகம் துணைபுரிந்தார். மேலும் அறிமுக வீரர்களான ம.்.றூப், மலிங்க இருவரும் சிறப்பாக செயற்பட்டனர்.

அணியின் அனைத்து வீரர்களும் ஒத்துழைப்பு அளித்ததன் மூலம் இலங்கை அணி மூன்றாவது முறையாக ஆசியக் கிண்ணதை கைப் பற்ற முடிந்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

# இரண்டாயிரம் கோடி ரூபாவை விழுங்கும் ஒலிம்பிக் திருவிழா!

(ஏதென்ஸ்)

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கு சுமார் இரண்டாயிரம் கோடி செலவாகிறது.

உலகின் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக்போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்றுவருகிறது. 2000 ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவில் உள்ள சிட்னி நகரில் இந்தப் போட்டி நடந்தது.

இந்த ஆண்டுக்கான ஒலிம்பிக் திருவிழா வருகிற 13 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதிவரை கிரீஸ் தலைநகர் ஏதென்ஸில் நடைபெறவுள்ளது.

16 தினங்கள் நடைபெறும் இந்தப் போட்டி மொத்தம் 28 விளையாட்டுக்களை உள்ளடக்கியது. இந்த 28 விளையாட்டுக்களும் 38 இடங்களில் நடக்கிறது.

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் மொத்தம் 10 ஆயிரத்து 500 வீர, வீராங்கனைகள் பங்கேற்கிறார்கள். அதிகாரிகள் 5,500 பேரும், 201 ஒலிம்பிக் கமிட்டி நிர்வா



கிகளும் கலந்துகொள்கிறார்கள்.

உலகம் முழுவதும் இருந்து 21 ஆயிரத்து 500 பத்திரிகை நிருபர்கள், புகைப்படப் பிடிப்பாளர்கள் இந்தப் போட்டியைப் பற்றிய தகவல்களைத் திரட்ட ஏதென்ஸில் குவியவுள்ளனர்.

ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் வீர, வீராங்கனைகள் தங்குவதற்காக ஒலிம்பிக் கிராமம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 16 ஆயிரம் பேர் தங்கலாம்.

ஒலிம்பிக் போட்டியில் மொத்தம் 45 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகின்றார்கள். இராணுவம், கடற்படை, தீயணைப்புப் படையினர், தனியார் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகிறார்கள்.

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கு மொத்தம் 2000 கோடி செலவாகிறது. இதை அந்த நாட்டு பிரதி நிதி அமைச்சர் தெரிவித்தார். மற்ற ஒலிம்பிக் போட்டியை விட இது சாதனையாகும். 1500 கோடி செலவுக்குத் திட்டமிடப்பட்டது. ஆனால், தற்போது அதைத் தாண்டி 2000 கோடிக்கு செலவு ஏற்பட்டுள்ளது.

# தாச்சி சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் 2004 ஆம் ஆண்டுக்கான மாபெரும் தாச்சிப்போட்டியில் - சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மாலை 4 மணிக்கு,

கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

இதேவேளை, பிற்பகல் 5 மணிக்கு இதே மைதானத்தில் இணுவில் அண்ணா விளையாடடுக்கழகத்தை எதிர்த்து இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

## காலாவதியான பொருட்கள் சாவகச்சேரியில் அழிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட நகர்ப் பகுதியை அண்டிய பகுதிகளிலுள்ள கடைகளில் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகர சபை சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது பெருமளவான காலாவதியான நூடில்ஸ், போன்ற பல பொருட்கள் கைப் பற்றப்பட்டு சாவகச்சேரி நகரசபை அலுவ லகத்துக்கு அண்மையில் வைத்து எரியூட்டி அழிக்கப்பட்டன.

காலாவதியான உணவுப் பொருட்களின் விற்பனை அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது. இதற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினரின் விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினர் இவ்வாறு திடீர் சோதனை மேற்கொண்டு பெருமளவான காலாவதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (29)

## நோர்வேயிலிருந்து வந்தவர்களிடம் வெள்ளியன்று நகைகள், பணம் கொள்ளை

### வடமராட்சி கிழக்கில் சம்பவம்

(வடமராட்சி)

நோர்வேயிலிருந்து விடுமுறைக்காக வந்த குடும்பத்திடமிருந்து நகைகள், பணம் ஆகியன கொள்ளையடிக்கப்பட்ட சம்பமொன்று வடமராட்சி கிழக்கிலுள்ள உடுத்துறையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது- உடுத்துறையை சேர்ந்த மு.சிவஞான சுந்தரம் பல ஆண்டுகளின் பின் குடும்பத்துடன் சொந்த ஊரான உடுத்துறையில் விடுமுறையைக் கழிக்க வந்திருந்தார். கடந்த வெள்ளிகிழமை இரவு நித்திரையில் இருந்த வேளை அவர்களிடமிருந்த 20 பவுண் தங்க நகைகள், 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பணம் மற்றும் வெளிநாட்டு கரன்சி நோட்டுக் கள் ஆகியன திருடப்பட்டுள்ளன. (17)

## பொலிகண்டி வெள்ளவாய்க்காலை மூடும் செயலை தடுத்து நிறுத்துமாறு அரச அதிபரிடம் கோரிக்கை!

பொலிகண்டியிலுள்ள பிரதான வெள்ள வாய்க்காலை தனிப்பட்ட நபரொருவர் கொங்கிறீற் போட்டு மூடிய செயலால் அந்தப் பகுதியில் வசிக்கும் சுமார் 50 குடும்பங்கள் பாதிக்கப்படும் வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிவித்து, அவரின் செயலை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி அந்தப் பகுதி மக்கள் யாழ். அரச அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

இந்த வெள்ள வாய்கால் பொலிகண்டி ஆலடி ஒழுங்கை ஊடாகவும், பதுவளை ஒழுங்கை ஊடாகவும் அதன் பின்னர் தனிப் பட்ட இரு பகுதியாரின் காணிக்கு இடையாலும் சென்று கடைசியாக பொலிகண்டி பதுவளை பிரதான வீதியில் தொன்மை வாய்ந்த மதவுக் கூடாக பெரும் கடலை சென் றடைகிறது. இதனால், ஊர் மக்கள் வெள்ளப் பெருக்கின் பாதிப்பின்றி காலங்காலமாக வாழ்ந்து வருகிறோம்.

நிலைமை இப்படி இருக்கையில் வெள்ளம் மதவுக்குள் கடைசியாக சென்றடையும் காணியின் கிழக்குப் பக்கத்து காணி உரிமையாளர் காணிக்குள் கிழக்கு பக்கமாக வெள்ளம் புகும் பாதையை தன்னிச்சையாக கொங்கிறீற்றினால் அத்திவாரம் போட்டு முடியுள்ளார். இதனால், அந்தப் பகுதியிலிருந்து வரும் வெள்ளம் கடலுக்குசென்று பாய்வதற்கு இடமில்லாமல் போய்விடும். அதனால், அந்தப் பகுதியில் வாழும் மக்கள் குடியிருப்புக்களில் வெள்ளம் தேங்கி நின்று அழிவைத் தருவதுடன் தொற்று நோய்களும் பரவுவதற்கும் வாய்ப்புண்டு.

ஆகவே, இந்த விடயத்தில் தலையிட்டு உடனடியாக அதனைத் தடுத்து நிறுத்துமாறு தாழ்மையாக கேட்டுக்கொள்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் பிரதேச செயலர் - பருத்தித்துறை, கிராம அலுவலர் - பொலிகண்டி, பிரதேசசபை பருத்தித்துறை, நிறைவேற்று பொறியியலாளர் பெரும்தெருக்கள் திணைக்களம் - யாழ்ப்பாணம், பணிப்பாளர், பெரும் தெருக்கள் அதிகாரசபை ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (17)

### கல்வியியற் கல்லூரி பயிலுநர்களுக்கான கூட்டம்

யாழ். கல்வியியற் கல்லூரியில் உள்ளகப் பயிற்சி பெறும் முகிழ் நிலை ஆசிரியர்களுக்கான விசேட கூட்டம் நாளை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் அவர்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவும் வழங்கப்படும் என பீடாதிபதி கமலநாதன் தெரிவித்தார்.

### சமூகக் கல்வி போட்டிகள்

தெல்லிப்பளை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான சமூகக்கல்விப் போட்டிகள் இன்று காலை 11 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (101)

### ஆங்கில கல்வித்தரத்தை உயர்த்த

## ஆங்கில பாட ஆசிரியர்களுக்கு யாழ். வலயத்தில் பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் வீழ்ச்சி அடைந்து வரும் ஆங்கிலக் கல்வியாளர் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் யு.எஸ். எயிட் நிதி உதவியுடன் ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகள் யாழ். கல்வி வலயத்தில் நடத்தப்படவுள்ளது.

ஆசிரிர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட போதனாசிரியர்களுக்கான பயிற்சி நெறிகள் கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் கவுன்சிலினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தச் செயற் திட்டத்தின் கீழ் பயிற்சிபெற்ற, வளமிக்க ஆங்கில ஆசிரியர் ஆளணியை உருவாக்கி அதன் மூலம் குடாநாட்டில் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்துவதே இந்தச் செயற்திட்டத்தின் நோக்கமாகும். இந்தச் செயற்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் வரையும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

### நீர்வேலி தமிழ் கலவன் பாடசாலை ஆண்டு விழா

நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் 125ஆவது ஆண்டு விழாவும், பரிசளிப்பு விழாவும் நாளை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரமும் கலந்துகொள்ளவுள்ளனர். நிகழ்ச்சியின் இறுதியில் மலர் வெளியீடும், மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## யுனிசெவ் அனுசரணையுடன் சிறுவர்களுக்கான நாடகப்போட்டி

வடக்கு - கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன் காக்கும் திட்டமொன்று, யுனிசெவ் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தின் பாடசாலைகளில் வலய மட்டத்திலான நாடகப் போட்டிகள் நடைபெற்று வருகின்றது. இதன்படி நாளை வடமராட்சி கல்வி வலயத்தில் வட இந்து மகளிர் கல்லூரியிலும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை யாழ். கல்வி வலயத்தில் யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியிலும், 14ஆம் திகதி சனிக்கிழமை வலிகாமம் கல்வி வலயத்தில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் நாடகப்போட்டிகள் நடைபெறும்.

தென்மராட்சி கல்வி வலயத்தில் கடந்த 31ஆம் திகதியும் தீவக வலயத்தில் கடந்த முதலாம் திகதியும் நாடகப் போட்டிகள் நடைபெற்று முடிவடைந்தன. வலய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் நாடகங்கள் மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கு கொள்ளும். மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் நாடகங்களுக்கு சிறுவர் நலத்திட்டத்தால் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். போட்டிகள் தொடர்பான சுற்றறிக்கை கல்விசார் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ஊடாக அனைத்து பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட கல்வித் திணைக்களமும் இந்தத் திட்டத்துடன் இணைந்து செயற்படுகிறது.



பருத்தித்துறை நகரசபையினால் இந்த ஆண்டுக்கான உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பருத்தித்துறை மரக்கறிச் சந்தையை சிரமதானம் மூலம் திருத்தப்படுவதைப் படத்தில் காணலாம். (12)

# சின்னஞ் சிறு செய்திகள்

### பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான பரீட்சை

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான எழுத்துப் பரீட்சை இன்று காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்து கல்லூரியில் நடைபெறுமென தென்மராட்சி கல்வி வலய பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (29)

### ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் சொற்பொழிவுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு "ஆன்மீக வழியில் பெண்கள்" எனும் விடயம் தொடர்பாக ஸ்ரீ விசுவாம்பாள் விசாலாட்சி மாதாஜி சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

### தெல்லிப்பளைக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம்

(உடுவில்)

தெல்லிப்பளைக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆண்டுக்கான, உதை பந்தாட்டப் போட்டிகளுக்கான ஒழுங்கு நிரல் தயாரிக்கப்படவிருப்பதால், சகல பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கோட்டக்கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன் அறிவித்துள்ளார். (101)

### கன்னடத் திரைப்பட விடியோக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலை திரைப்பட வட்டத்தினரின் ஏற்பாட்டில் -

நாளைமறு தினம் புவியியற் துறை மண்டபத்தில் புகழ்பெற்ற கன்னட நெறியாளர் "கிரிஷ்கர்னாட்" இன் இயக்கத்தில் உருவான "கனூறு ஹெக்கடித்தி" எனும் கன்னடத் திரைப்படம் ஆங்கிலத் துணைத்தலைப்புகளுடன் விடியோக் காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளது.

படத்தின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராசாவின் தலைமையில் கீழ் காண்பித்த படம்பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும்.

### கெருடாவில் திருக்குமரன் சனசமூக நிலையம் திறப்பு விழா

(சாவகச்சேரி)

நிகொட் நிதி உதவி மூலம் புனரமைக்கப்பட்ட சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட கெருடாவில் திருக்குமரன் சனசமூக நிலைய திறப்பு விழா இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் செ. சிறிநிவாசனும் மற்றும் தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் செ. கலைவாணன், நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், நகர சபை செயலாளர் மு.செ. சரவணபவ ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (29)

### கரவெட்டி செயலகத்தில் நியாப் திட்டத்தின் முன்னேற்றக் கூட்டம்

(கரவெட்டி)

கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் தலைமையில் நியாப் திட்டத்தின் முன்னேற்றக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதில் அத்தாய் கிராம அபிவிருத்திக்காக, நியாப் திட்டத்தில் செயற்படுத்தப்பட்ட ஒந்திராயக்குள அகழ்வு வேலைகள், பொது மண்டபக் கட்டுமானப் பணிகள், ஜீவனோபாய கடன் வழங்கும் திட்டம் என்பன இந்த மாதம் 31ஆம் திகதிக்குள் முற்றுப்பெறவேண்டுமெனவும், பொது மண்டபம் எதிர்வரும் 14ஆம் திகதியன்று திறந்து வைப்பது போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (13)

### டெங்கு நோய் விழிப்புணர்வு பிரசாரம்

நல்லூர் பிரதேச சபையினரும், யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களும் இணைந்து, டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு பிரசார நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கோண்டாவில் பகுதியில் உள்ள வீடுகளுக்குச் சென்று டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுப் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்தப் பிரசார நடவடிக்கையின் போது, டெங்கு நோய் பரவுவதற்கான காரணம் மற்றும் டெங்குநோய் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் போன்றவற்றினை பொது மக்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

## துர்க்கை அம்மன் ஆலய மஹோற்சவம்

(உடுவில்)

தெல்லிப்பளை அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி புதன் கிழமை பி.ப. 2 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 26ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.3 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 28ஆம் திகதி காலை 8 மணிக்கு "துர்க்கா புஷ்கரணி"யில் தீர்த்தோற்றசவமும் நடைபெறும்.

பெண்கள், குழந்தைகள் நகைகள் அணிந்து வருவதை குறைத்துக் கொள்ளும்படியும், பெண்கள் சைவத் தமிழ் கலாசார உடைகளுடன் கோவிலுக்கு வருவதே மிகப் பொருத்தமானதெனவும் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (101)

## திருநகர் வெள்ளவாய்க்காலில் துர்நாற்றம் வீசுகிறது

திருநகர், இராசசிங்கம் வீதியில் தியோடு பாலர் பாடசாலைக்கு முன்பாக உள்ள வெள்ளவாய்க்காலில் மிக நீண்டகாலமாக கழிவு நீர் தேங்கியிருப்பதால், அந்தப் பகுதியில் பெரும் துர்நாற்றம் வீசுவதாக அப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக யாழ். மாநகரசபை அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்டும் எந்தவித பலனும் கிடைக்கவில்லை என்றும், இவ்வாய்க்காலில் தேங்கிக் கிடக்கும் கழிவு நீரால் சுகாதார சீர்கேடுகளும் ஏற்படுகின்றன என்றும் தெரிவிக் ப்படுகின்றது. (55)



## சிநேகிதியே

# பின்நோக்கி ஓடுகின்ற கடிகாரமே வாழ்க்கை

நம் வாழ்க்கையில் எதை இழந்தாலும் திரும்பப் பெற்றுவிடலாம். இரண்டே இரண்டு விடயங்களைத் தவிர, ஒன்று - உயிர், இன்னொன்று - நேரம்.

நேரத்தின் அவசியம் பல பேருக்குத் தெரிவதேகிடையாது. அதன் முக்கியத்துவம் தெரியாததால் நேரத்தை வீணடித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இன்று எல்லாமே துரிதகதியில் இயங்குகின்றன. சாதாரண உணவகங்களைவிட, பெரிய சுற்றுலா உணவு விடுதிகளில் கூட்டம் அதிகமாக இருக்கிறது. மின்சாரத்தில் ஓடும் அதிவேக ரயில்கள் அதிகம். சாதாரண தபாலை விழுங்கிவிட்டு, ஈமெயில் பரந்துவிட்டது. செல்லுமிடங்களிலிருந்து, நினைத்தபோது தொடர்புகொள்ள 'செல்போன்' வந்துவிட்டது. ஆக, எல்லாமே வேகம் காரணமாகின்றது. இன்று நேரத்தின் அருமை தெரிந்தவர்கள் அதிகரித்து வருகின்றார்கள்.

நேரம் என்பது சுறாமீனைப்போல, சுறாமீன் எம்மீது எதிர்கொண்டால், அதை வெட்டி வீழ்த்தினால்தான் நாம் பிழைக்கமுடியும். இல்லையெனில் சுறாமீன் நம்மை விழுங்கிவிடும். நேரமும் அப்படித்தான். நாம் திட்டமிட்டு செலவிடவில்லையெனில், நேரம் கட்டுப்பாட்டில் இருக்காது. எதற்கெடுத்தாலும் நேரம் இல்லை... நேரம் இல்லை... என்று திணறிக்கொண்டு திண்டாட வேண்டியதுதான்.

நம் நேரத்தை விழுங்குவதற்கென்றே இந்த உலகில் சில விடயங்கள் உள்ளன. அவற்றை நாம் அடையாளம் கண்டுகொண்டு, எச்சரிக்கையாகச் செயற்படவேண்டும். அந்த நேர வீணாக்கிகளைப் பார்த்தால்,

முதலாவது - மறதி. நாம், பெரும்பாலும் மறதி காரணமாகப் பல காரியங்களைக் குறித்த காலத்தில் செய்து முடிப்பதில்லை. ஆனால், காரியத்தைச் செய்து முடிக்காததற்கு, நேரமில்லாததுதான் காரணம் என்று நொண்டிச் சமாதானம் சொல்லுவது பலருக்கும் வழக்கமாகவே ஆகிவிட்டது. இதைத் தவிர்க்கத் தினமும் செய்யவேண்டிய காரியங்களை ஒருபேப்பரில் எழுதி வைத்துக்கொண்டு செய்து முடித்தவற்றை சரிபோட்டுக் கொண்டே வரவேண்டும்.

இரண்டாவது - தூக்கம். ஒரு மனிதனுக்கு நான்கு முதல் அதிகபட்சம் ஆறு மணி நேரத்தூக்கம் போதுமானது. தினமும் ஒரு மணிநேரம் வழக்கமான நேரத்துக்கு முன்பு எழுந்தால், வாரத்துக்குக் கூடுதலாக ஏழு மணிநேரம் கிடைக்கும். அதாவது எல்லோருக்கும் வாரத்துக்கு ஏழு நாட்கள் என்றால், நமக்கு மட்டும் கூடுதலாக மூன்றில் ஒரு பங்கு நாள் கிடைக்கும். தினமும் உடற்பயிற்சி, தியானம் செய்யுங்கள். இரண்டுமணி நேரத் தூக்கத்தால், உடலுக்குக் கிடைக்கின்ற ஓய்வைப் பெறமுடியும்.

எடுத்ததை எடுத்த இடத்தில் வைக்கின்ற பழக்கம் இல்லாமையினால், வீடுகளில் குறிபபாக பாடசாலை, வேலைக்குச் செல்கின்ற காலை நேரத்தில் எத்தனை மன அழுத்தம் ஏற்படுகிறது என்பதை சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. எடுத்ததை எடுத்த இடத்தில் வைக்கின்ற பழக்கம் இருந்தால், வாழக்கையில் மன அழுத்தங்கள் குறையும். நிறைய நேரம் மிச்சமாகும்.

மூன்றாவது - வாதம்புரிவது. தயவு செய்து யாரிடமும் எந்த விடயம் குறித்தும் வாதம் புரிந்துகொண்டு இருக்காதீர்கள். யார் சரி, யார் தவறு என்று நிறைய சமயங்களில் விவாதங்கள் மூலம் முடிவு தெரியாது. நேரமும், சக்தியும் விரயமாவதுதான் பலன். உங்கள் தரப்புக் கருத்தை, பொறுமையால் எடுத்துச் சொல்லிவிட்டு, விடயத்தை அத்துடன் விட்டுவிடுங்கள்.

நேரம் வீணாவதற்குத் தற்போது, தொலைபேசியும் ஒரு காரணமாகிவிட்டது. சிலபேர் எடுத்தார்கள் என்றால், நேரம் போவது தெரியாமல் பேசிக்கொண்டே இருப்பார்கள். தயவு தாட்சண்யம் பார்க்காமல் தொடர்பை வெட்டி விடுங்கள். அப்படி மறுமுனையில் பேசுபவர், மரியாதைக் குரியவராக இருந்தால், சிறிது நேரத்தில் நீங்களே தொலைபேசி பண்ணுவதாகச் சொல்லி தொடர்பை வெட்டிவிடுங்கள்.

அது போலவே வீட்டுக்கு வரும் விருந்தினர்கள், வேலைத்தள விருந்தாளிகள். வீட்டை விட்டு வெளியில் எங்கோ புறப்படுவதற்குத் தயாராகிக் கொண்டு இருக்கிறீர்கள். அப்போது பார்த்து, எதிர்பாராதவிதமாக விருந்தினர் ஒருவர் வந்துவிட்டால், அப்போது எப்படி நடந்து கொள்ளவேண்டும். புறப்படும் நேரம் தாமதமாகக் கூடாது. அதேநேரம், விருந்தாளி மனமும் புண்படக்கூடாது. என்ன செய்யலாம். நல்ல காலம்! சரியான சமயத்தில் வந்திருக்கிறீர்கள் இன்னும் ஐந்து நிமிடம் தாமதித்து வந்திருந்தால், எங்களை உங்களால் சந்திக்க முடியாமல் போயிருக்கும் என்று அன்பாகத் தெரிவித்தால், அவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலையைப் புரிந்து கொண்டு, நிச்சயம் ஒத்துழைப்புக் கொடுப்பார்கள்.

அது போலவே, அலுவலகத்தில் வருபவர்களால், அலுவலகவேலை தடைப்பட்டுப் போகும் என்றால், விருந்தினர்களை உங்கள் இடத்துக்கு வரவழைக்காமல், பதிலாக நீங்கள் நேரம் இருக்கும் சமயத்தில் அவர்கள் இடத்துக்குச் சென்று உரையாடுங்கள். கழுத்தறுக்கும் சக ஊழியர் என்றால், வேலையை முடித்துவிட்டு நானே வீட்டுக்கு வருகின்றேன் என்று கூறித் தவிர்த்துவிடலாம்.

உங்களுடைய சில அங்கஅசைவுகள் மூலம் நீங்கள் கடும் வேலையில் இருக்கின்றீர்கள என்பதைக் காட்டமுடியும். நேரத்தை வீணாக்க விரும்பவில்லை என்று மற்றவர்களுக்குத் தெரிவிக்கலாம். உதாரணமாக - நீங்கள் இருக்கும் இருக்கைக்கு எதிரில் வந்து ஒருவர் இருந்தால், சட்டென்று நிமிர்ந்து வந்திருப்பவரை ஒரு பார்வை பார்த்துச் சொல்லுங்கள் என்று மென்மையாகச் சொன்னால் கூடப்போதும். கதைக்கின்றபோது அவ்வப்போது மணிக்கூட்டைப் பார்த்தால்போதும், நம் நேரத்தின் அருமையை மற்றவர்களுக்குப் புரியவைத்துவிடலாம்.



நேரம் முக்கியம்தான். அதை வீணாக்கக் கூடாது. ஆனால், அதேநேரம் நேரத்தை மிச்சம் பிடிக்கின்றேன் என்று வீதிகளில் வாகனம் செலுத்திச் செல்கின்றபோது தயவுசெய்து முனையாதீர்கள். உங்கள் வாழ்க்கையே தொலைந்து போகின்ற அல்லது மற்றவர் வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிடும் அபாயம் உண்டு. சாதாரணமாகப் புறப்பட வேண்டிய நேரத்துக்குக் கால் மணித்தியாலம் அல்லது அரை மணித்தியாலத்துக்கு முன்னதாகப் புறப்பட்டு விடுங்கள். வழியில் எதிர்பாராத பிரச்சினை என்றால், அதனால் நேரத்தைச் சேமிக்க இது உதவும்.

கடைசியாக - மனித வாழ்க்கை என்பது, பின்னோக்கி ஓடிக்கொண்டிருக்கும் ஒரு கடிகாரம். நாம் பிறந்த விநாடி தொடக்கம் அது பின்னோக்கி ஆரம்பித்துவிட்டது. எனவே, மிஞ்சிய காலத்தைப் பயனுள்ள விதமாகப் பயன்படுத்திக் கொள்வதுதான் புத்திசாலித்தனம்.

* *ஒரு வருடத்தின் அருமை – பரீட்சையில் தவறிவிட்ட மாணவனிடம் கேளுங்கள்.*
* *ஒரு மாதத்தின் அருமை – நிறைமாதத் துக்கு முன்னதாக பிரசவித்த தாயைக் கேளுங்கள்.*
* *ஒரு வாரத்தின் அருமை – வேலை கிடைக்காத தினக்கூலிக்காரனிடம் கேளுங்கள்.*
* *ஒரு மணி நேரத்தின் அருமை – விபத்தில் சிக்கியவர்களுக்குச் சிகிச்சையளித் துக் காப்பாற்றும் மருத்துவரிடம் கேளுங்கள்.*
* *ஒரு நிமிடத்தின் அருமை – பஸ்ஸைத் தவற விட்டவரிடம் கேளுங்கள்.*
* *ஒரு விநாடியின் அருமை – விபத்தில் தப்பிப் பிழைத்தவரிடம் கேளுங்கள்.*
* *ஒரு செக்கனின் அருமை – ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கத்தைத் தவறவிட்டவரிடம் கேட்டால் புரியும்.* ✪

# குழப்பங்கள் உண்டாக்கும் பிரச்சினைகள்

ஒருவர் மற்றவரிடம் தமது குடும்பப் பிரச்சினைகளைக்கூட சொல்லக்கூடும். உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவார். அப்போதும், அமைதியுடன், கொஞ்சம் அனுதாபத்துடன் அவர் சொல்வதைக் கேட்கலாம்.

'என் மனைவி எப்போதும் என்னை நச்சரிக்கிறாள்' என்றார் ஒருவர்.

'உங்கள் உணர்ச்சிகள் எனக்குப் புரிகிறது' என்றார் நண்பர்.

'தினமும் ஏதாவது ஒரு விடயத்துக்காக சண்டை போட்டுக்கொள்கிறோம்'.

உஙகளைப் போன்ற பிரச்சினை எனக்கும் இருந்ததுண்டு.

இப்படி ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொள்ளும்போது, பிரச்சினை நமக்கு மட்டும் இல்லை. எல்லோருக்கும் இதே பிரச்சினைதான் போலிருக்கிறது என்று எண்ணம் தோன்றும். வாழ்க்கை என்பது இதுதான் போலிருக்கிறது என்று நினைப்பார்கள். எதையும் உண்மையென நினைக்க மாட்டார்கள்.

ஒருவர் தன் குடும்ப நண்பரிடம் வந்து, என் மகனை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் சொல்வதைக் கேட்கமாட்டேன் என்கிறான் என்று குறைபட்டுக் கொண்டார்.

உங்கள் மகனை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இல்லையா? காரணம் அவன் நீங்கள் சொல்வதைக் கேட்பதில்லை என்றார் நண்பர்.

'ஆமாம்'.

அதாவது உங்கள் மகனை உங்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை என்பது தானே பிரச்சினை?

அதைத்தான் ஏற்கனவே சொல்லி விட்டேனே?

உங்கள் மகனை நீங்கள் புரிந்துகொள்ள முதலில் நீங்கள் அவன் சொல்வதைக் கேட்க வேண்டும் என்றார் நண்பர்.

மகனைப் பற்றிக் குறை சொன்னவர் - கொஞ்ச நேரம் திணறிப்போனார். ஆமாம் என்றார். மீண்டும் ஆமாம் என்றார். பிறகு எனக்கு புரிகிறது இப்படிப்பட்ட நிலையில் நானும் ஒரு கட்டத்தில் இருந்திருக்கிறேன். அதாவது என் மகனைப் போல அப்போது என் தந்தை என்னைக் குறை கூறியிருக்கிறார் என்றார்.

தொடக்கத்தில் இவர் தன் மகன் மனதில் என்ன இருந்தது எப்படிப்பட்ட பிரச்சினையில் இருந்தான் என்பதை தெரிந்து கொள்ளவில்லை. அவனைப் பேசவிடவில்லை. இவர் மட்டும் பேசிக் கொண்டிருந்திருக்கிறார்.

மற்றவர்கள் விடயத்திலும் இந்தக் கதை தான் தொடர்கிறது. நாம் என்ன நினைக்கிறோம் என்பதையே அடிக்கடி பேசுகிறோம். மறறவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கேட்கவிரும்புவதில்லை. வாழ்க்கையில் பின்னுக்குத் தள்ளப்படுகிறவர்கள் படும்பாடு இது தான்.

ஒருவர் எப்போதும் தம்மைப் பற்றி மட்டும் பேசிக்கொண்டிருந்தால், அது சுயசரிதை. தனது வாழக்கையில் ஏற்பட்ட வெற்றி, தோல்விகளை மட்டும் விவாதித்துக் கொண்டிருப்பார். அப்போது இவர் பேசுவதைக் கேட்பவருக்குத் திரும்பிப் பதில் சொல்லவோ, ஏதாவது கருத்து கூறவோ அனுமதிக்காமல், தொடர்கதைபோல் பேசிக்கொண்டே போவார்.

இப்படிப் பேசுபவர்கள், கேட்பவர்களை அவமதிப்பதாகும் என்பது ஒரு தத்துவ மேதையின் அசைக்க முடியாத கருத்து.

சுடு சொற்களால் பேசுவது மட்டும் அவமதிப்பது அல்ல. தன் சுயசரிதையை மட்டுமே விடாமல் சொல்வதும், மற்றவர்களை அவமதிப்பதாகும். இதனால், ஒருவருக்கு ஒருவர் புரிந்து கொண்டு செயல்படமுடியாது. நட்பில், உறவில், தொழிலில், வியாபாரத்தில் விரிசல் ஏற்படும். இவர்கள் ஒன்றுபட்டு இயங்கமுடியாது.

ஒருவர் பேசுவதைத் தொடர்ந்து கேட்பது மிக அவசியம் என்றாலும், எப்போதும் பேசுவது என்பது ஒரே பக்கமாக இருக்கக் கூடாது. மனதில் பட்டவைகளை இருவரும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

ஏ வர் சொல்வதை கூர்ந்து கேட்பதால், அவர் மீது அனுதாபப்படுவதாகாது, காது கொடுத்துக் கேட்பது அவ…



சொல்வதை ஆமோதிப்பது போன்றது. இப்படிக் கவனிக்கும்போது ஒருவருக்கு ஒருவர் உதவியாகச் செயற்படமுடியும். நல்ல உறவுக்கு அத்திவாரமாக அமையும். தனிப்பட்ட வாழ்க்கையில் மட்டுமல்ல தொழிலில், வியாபாரத்தில் ஏன் சமுதாயத்திலும்கூட.

அளவுக்கு மேல் அதிகமாக ஒருவர் பேசுவதை மணிக்கணக்காகக் கேட்டுக்கொண்டிருப்பதும்கூட ஆபத்தானது. எதற்கும் ஒரு அளவு உண்டு. பேசுபவர்களும் சரி, கேட்பவர்களும் சரி. இந்த அளவைக் கைப்பற்றவேண்டும். தேவையில்லாத விடயங்களை ஒருவர் பேசிக் கொண்டே போனால், மன்னிக்கவும் எனக்கு அவசர வேலை இருக்கிறது என்று சொல்லி, தப்பித்துக் கொள்ள வேண்டும். ✤

# சிநேகிதிக்கு ஒரு மடல்



### அன்புள்ள சிநேகிதியே

உன் மடல் கிடைக்கப் பெற்றேன். பக்தியிலே விஞ்சி நிற்கும் பரமாத்மா எழுதுவது போன்று ஆலய தரிசனம் பற்றி எழுதியிருந்தாய். கருத்தளவிலும், பேச்சளவிலும் உனது எழுத்துக்கள் நியாயமானவை. அதை நான் மறுக்கவில்லை. ஆனால், யதார்த்தத்துக்கு உனது கருத்துக்கள் பொருந்துமா? என்பது சிந்திக்கப்படவேண்டிய விடயமே.

சமூகத்திலே சில விடயங்கள் ஆடம்பரமானவை என்றும், அவசியமானவை அல்ல என்றும் தெரிந்தும் ஆதரித்துப் போகவேண்டிய அவசியம் உண்டு. அந்த வகையில்தான் ஆலய தரிசனத்தின்போது - ஆடை, அணிகலன்களும் சமூகவாழ்க்கையிலே சில விடயங்களை நாம் விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக்கொள்ள வேண்டியோ அல்லது அனுசரித்துப் போக வேண்டிய தேவை உண்டு. அது போகட்டும்.

யாரோ ஒரு பெண் ரீ.வி.எஸ் மோட்டார் சைக்கிளில் வயோதிபத் தந்தையை ஏற்றிச் சென்றதைப் பெரிய விடயமாக அன்று தொலைபேசியில் கூறினாய்.

நண்பியே உன்னை நினைக்க எனக்கு இன்னும் வெட்கமாகத்தான் இருக்கின்றது. சம உரிமை என்றும், பெண்ணியம் என்றும் குரல் கொடுப்பவர்களும் நீங்கள்தான். பின்னர் அவை பற்றி விமர்சனம் செய்பவர்களும் நீங்கள்தான்.

பாரதி கண்ட புதுமைப்பெண் பற்றிப் பேசும் நீங்களே ஒரு பெண்ணினது வளர்ச்சி, ஆணுக்கு நிகராகும்போது அதை ஏதோ தவறானதாகக் கருதுகின்றீர்கள்.

காலத்தின் தேவை கருதிப் பெண்கள் ஆயுதம் ஏந்திப் போராடுகின்ற தமிழ் ஈழத்திலா நீ இருக்கின்றாய்? தன்னுடலில் குண்டைக் கட்டிக் கொண்டு கரும்புலிகளாகிய அங்கயற்கண்ணி போன்ற வீரம் செறிந்த பெண்கள் வாழ்ந்த மண்ணில், நீயும் இருக்கின்றாய் என்பது மிகவும் வெட்கமான விடயம்.

தாயகம் மீட்கும் போரில் தானைத் தலைவன் அணியில், ஆயிரம் ஆயிரம் பெண்கள் போராடுகின்ற தமிழ் ஈழத்தில், உன்னைப் போன்று மோட்டார் சைக்கிள்கள் ஆண்களுக்குரியது, பெணகளுடையது என ரகம் பார்க்கும் பெண்கள் என்னைப் பொறுத்தவரையில் ஆளுமையற்றவர்களே.

வேறு எவருடைய உதவியும் கிடைக்காத பட்சத்தில், சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகத் தனது தந்தையாரை ரீ.வி.எஸ் இல் ஏற்றிச் சென்ற பெண்ணின் மனத்தைரியத்தை நான் பாராட்டுகின்றேன்.

பாரதி புதுமைப் பெண்பற்றிக் கூறிய சில வரிகளை உனக்குக் கூற விரும்புகின்றேன்.

"மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பாராம்
மூடக் கட்டுக்கள் யாவும் தகர்ப்பாராம்
காத்து மானிடர் செய்கையனைத்தையும்.
கடவுளர்க்கினிதாகச் சமைப்பாராம்
ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வாராம்"

எனவே, என் பிரிய தோழியே காலத்தின் தேவை கருதிப் பெண்கள் எதையும் சாதிக்கத் துணிவது எம்மைப் பொறுத்தவரையில் வரவேற்கப் பட வேண்டியதே.

எண்ணங்கள் பல உன்னோடு பகிர்ந்து கொள்ளவுண்டு. ஆனால், அதற்கு இந்த மடல் இடந்தராது. எனவே, அடுத்த மடலில் உன்னைச் சந்திக்கும்வரை.

அன்புள்ள சிநேகிதி
லெஸ்லினா

# பிஞ்சுமுகத்தின் தேடல்

வெயிலின் வேகம் தணியும் மாலை நேரம். நான் தமிழ்ப்பாடசாலை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். என் தங்கையும் அருகில் நடந்து வந்து கொண்டிருந்தாள். அவள் நடையில் ஒரு துள்ளல். பார்வையில் துறுதுறுப்பு. இன்றைக்கு எங்கள் பாடசாலையில் முத்தமிழ் விழா நடக்க இருக்கிறது. அதனால், எல்லோரும் பண்பாட்டு ஆடையுடன் வர வேண்டும் என்று எங்கள் தமிழாசிரியர் சொல்லிவிட்டார்.

எனவே, நாங்கள் இருவரும் பட்டுப் பாவாடை சட்டை அணிந்து, கையில் வளையல், கழுத்தில் சங்கிலி, காலில் பாதசரம் அணிந்து செல்கிறோம். பாவாடை காலைத் தடக்குகிறது. அதைச் சற்றுத் தூக்கியபடி நடக்க வேண்டும். எனக்கு அது இடைஞ்சலாக இருந்தது. கஷ்டப்பட்டுக் காலைத் தூக்கி வைத்து நடக்கிறேன். தங்கைக்கோ மிக மகிழ்ச்சி. அவளுடைய பாவாடை நீளம் குறைவு. துள்ளித்துள்ளி வருகிறாள்.

இன்னும் ஒரு நிமிட நடைதான். பாடசாலை வந்துவிடும். நான் வேகமாக நடக்க முயற்சிக்கிறேன். அதற்கிடையில் என் மனம் பின்னோக்கி ஓடுகிறது... சென்றவாரம் நாங்கள் இலங்கைக்குப் போயிருந்தோம். அம்மாவும், அப்பாவும் இலங்கைப் பயணத்தைப் பற்றி அடிக்கடி பேசுவார்கள். நாங்கள் வெளிநாட்டுக்கு வந்து 5 வருடங்களுக்குப் பிறகு யாழ்ப்பாணம் போனோம். வெளிநாட்டுக்கு வந்த புதிதில் எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. என்னுடைய வகுப்புத் தோழர்கள், வெள்ளைக்காரப் பிள்ளைகள் எனது ஆசிரியர்கள் எல்லோரும் என்மீது அன்பு காட்டினார்கள். ஆங்கில மொழியைப் பரிவுடன் பயிற்றினார்கள். ஒரு வருடத்தில் நான் ஆங்கிலத்தில் நல்ல பயிற்சியைப் பெற்றுவிட்டேன். பாடசாலையும், தொலைக்காட்சியும் சுற்றுப்புறச்சூழலும் என்னைத் தமிழ் மொழியிலிருந்து வெகுதூரம் அழைத்துச் சென்றுவிட்டன. வீட்டில் அப்பாவும், அம்மாவும்கூட என் ஆங்கில மொழித் தேர்ச்சிக்காகத் தாங்களும் தமிழில் உரையாடுவதைத் தவிர்த்துக் கொண்டார்கள். பிறகென்ன... நான்கு வருடத்தில் நான் தமிழை முற்றாக மறந்துவிட்டேன்.

இந்த வருடம் தைமாதம் தமிழ்ப்பாடசாலையில் மீண்டும் தமிழ் படிக்க அனுப்பப்பட்டேன். தங்கையும் வந்தாள். எங்கள் வகுப்பில் 20 பிள்ளைகள். எல்லோரும் இலங்கையில் பிறந்து வளர்ந்து இடப்பெயர்வால் யாழ்ப்பாணத்தை விட்டுக் கொழும்பில் சில காலம் வாழ்ந்து, பின்னர் புலம்பெயர்ந்து வெளிநாட்டுக்கு வந்தவர்கள். இப்போது தமிழை முற்றாக மறந்து மீண்டும் கற்க வந்தவர்கள். எனக்குத் தமிழ்ப் பாடசாலை செல்வது மிக விருப்பமான செயற்பாடு, எங்கள் ஆசிரியை சீலை கட்டி, பொட்டு வைத்து அழகான தோற்றத்தில் வருவா... நாங்கள் எல்லோரும் படம் பார்ப்பதுபோல அவ பாடம் சொல்லித் தரும்போது மெய்மறந்து இருப்போம். விடுமுறையின்போது வந்தால் எங்களுக்கு நல்ல விருப்பம். தமிழ்ப்பாட்டுப் பாடி, ஆடி, விளையாடிப் படிக்கும் தமிழ் பாடசாலை, வகுப்பைவிட மகிழ்வைத் தந்தது.



"கோடை விடுமுறையில், நான் 3 வாரம் இலங்கை செல்கிறேன்." என்று தமிழாசிரியையிடம் சொன்னபோது, அவர் முகத்தில் ஏற்பட்ட மாற்றம்!... எனக்கு எதையோ சொன்னது. அதை அவவிடம் கேட்க விரும்பினேன். ஆனால் அது பண்பான செயலாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் என்னுடைய பாடசாலை ஆசிரியையிடம் "நான் இலங்கை செல்கிறேன்" என்று சொன்னபோது முகத்தில் வியப்பு இருந்தது. என் கைகளைப் பற்றிக் குலுக்கி "நீ உன் தாய் நாட்டுக்குச் செல்கிறாய்" நிறையச் செய்திகள் கொண்டுவர வேண்டும்." என்று கூறி வாழ்த்தி, என் கன்னத்தில் முத்தமிட்டு வாழ்த்தி அனுப்பினார். நான் மெய்மறந்து அவருக்கு நன்றி சொன்னேன்.

இலங்கை வந்தபோது... ஒரே வெயில், புழுக்கம், இரவில் தூக்கமில்லை. ஆனால், நிறையப் பழங்கள் சாப்பிட்டேன். எங்கள் வீட்டில் ஒரே சத்தம். உறவினர் என்று பலர் வந்து பார்த்துப் போனார்கள். அவர்களோடு தமிழில் உரையாட முடியவில்லை. அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா என்று பழைய உறவுகளை மீளக் கண்டபோது, மனதுக்கு உற்சாகம் ஏற்பட்டது. அவர்கள் கொஞ்சம் ஆங்கிலமும் நிறையத் தமிழும் பேசினார்கள். அம்மாவும், அப்பாவும் சளசள வென்று தமிழில் பேசினார்கள். எனக்கும் தமிழில் பேச எண்ணம் வந்தது. தங்கை ஆடு, மாடு, கோழி, நாய் எல்லாவற்றோடும் ஆங்கிலத்தில் பேசிப் பொழுதைக் கழித்தாள். சில தமிழ்ச் சொற்களையும் பிடித்து அவள் பேசியபோது எல்லோரும் சிரித்தார்கள்.



அவள் அடிக்கடி "நான் குளிக்கறிங் செய்யப் போறன்" என்று கூறுவாள். என் மனம் யாழ்ப்பாணத்தில் நின்றுவிடலாமா? என்று அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தது. அம்மம்மா செய்து தந்த உணவு வகைகள் அதை மேலும் வலியுறுத்தின. வெளிநாட்டு இயந்திர வாழ்க்கையைவிட, யாழ்ப்பாண வாழ்க்கை மகிழ்ச்சியாக இருந்தது. வெளிநாட்டில் நான் கண்ட காட்சிகள் இங்கே இல்லை என்று நான் எண்ணியிருந்த வேளை ஒருநாள் மாலை வேளை..

நானும் அம்மம்மாவும் கோயிலுக்கு நடந்து போய்க் கொண்டிருந்தோம். எங்கள் வீட்டுக்கு அருகேயுள்ள சிறிய கோயில்... தெருவில் இறங்கிச் சில நிமிடங்கள் நடந்து, ஒரு ஒழுங்கையில் இறங்கினோம். எதிரே ஒரு பெண் ஒருபையனை அணைத்தபடி வந்து கொண்டிருந்தாள்.

அந்தப் பையன் நெற்றியில் ஒட்டுப்பொட்டு. எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவனுக்கு ஒரு 14 வயதிருக்கலாம். பெண்ணுக்கு 25 வயதிருக்கும். இது என்னுடைய வெளிநாட்டு வாழ்க்கை அனுபவக் கணிப்பீடு.

அந்தப் பெண் அமெரிக்க ஆங்கிலம் பேசிக்கொண்டு சென்றாள். பையனோ அம்மம்மாவைக் கண்டவுடன் அவளுடைய அணைப்பிலிருந்து விடுபட முயற்சி செய்தான். ஆனால், அவளோ அவனைவிடவில்லை. இறுக அணைத்தபடி அவள் போய்க்கொண்டிருந்தாள்.

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. யாழ்ப்பாணக் கிராமத்தில் இப்படியொரு காட்சி!... அம்மம்மா முணுமுணுத்தது எனக்குக் கேட்டது.

"எல்லாம் ஏ-9 ஆல் வந்த கழிசறையள். விடலைப் பிள்ளையளைப் பழுதாக்குதுகள்." அம்மம்மா விரைந்து நடந்தாள். அவள் கோபம் நடையில் தெரிந்தது. நான் அப்போதே முடிவு செய்தேன். இனிமேல் யாழ்ப்பாணம் வருவதில்லை.

மேரி!... தங்கையின் குரலில் என் நினைவு கலைந்தது. நான் கண்களைத் துடைத்துக் கொண்டு பார்வையைச் செலுத்தினேன். தங்கை முன்னே ஓடிப்போய் மேரியின் கையைப் பிடித்துக் குலுக்கினாள். அவளை இடுப்பில் அணைத்தபடி சிரித்துக்கொண்டு நின்றாள்.

மேரி என் தங்கையின் வகுப்புத் தோழி. வெள்ளைக்காரப்பிள்ளை. பட்டுப் பாவாடையும், சட்டையும், நெற்றியில் ஒட்டுப் பொட்டு, கையில் கணணாடி வளையல். கழுத்தில் வெள்ளை முத்துமாலை, காதில் கொழுவும் சிமிக்கி, தலையைப் பின்னிப் பூவைத்து அலங்காரச் சிற்பம் போல நின்றாள்.

என் கையில் இருந்த கமராவால் அவளையும் தங்கையும் படம்பிடித்தேன். அந்தப் படத்தில் ஒரு பெரிய பிரதி அம்மம்மாவுக்கு அனுப்பவேண்டும் என்று எண்ணியபடி மூவரும் விழா மண்டபத்துள் நுழைந்தோம்.

அங்கே ஒலித்த நாதஸ்வரம் என் உள்ளத்தைக் குளிர்வித்தது.

**மனோன்மணி சண்முகதாஸ்.**

# அன்பைப் பகிர்தலில்; புரிந்துணர்வு

அன்பு பகிரப்பட வேண்டிய சூழல் ஏற்படும்போது, நாம் அதை எவ்வாறு எதிர் கொள்கிறோம் என்பது எந்த வயதில் உள்ளவராலும் சிந்திக்க வேண்டியதாகும். எமது சமூகத்தில் குடும்பம் என்ற வலிமையான கட்டமைப்பு காலப் போக்கில் மெல்ல வலுவிழப்பதைக் காண்கிறோம். (அதற்கான காரணங்கள் எவையாக இருப்பினும் அவை பற்றிய வாதப் பிரதிவாதங்களைப் பார்ப்பது இங்கு நோக்கமல்ல) சாதாரண நிலையில் உறவுகள் விரிவடைய, குடும்ப அமைப்பு மெல்ல நெகிழ்வடைய வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அந்த நெகிழ்வினூடே நாம் எவ்வாறு உறவுகளைப் புரிந்து கொள்ளப் போகிறோம், அனுசரித்துப் போகப் போகிறோம் என்பது சிந்திக்க வேண்டியது.



பெற்றோர் தமது பிள்ளைகளை உரிய காலத்தில் திருமணம் செய்து வைத்ததும், அந்தப் பிள்ளைகளூடாக, அவர்களுக்கான உறவில் வித்தியாசம் ஏற்படுவதை ஏற்கவேண்டியதாகிறது. பெண்பிள்ளையோ, ஆண்பிள்ளையோ அவர்களுக்கான பிள்ளை என்பதிலிருந்து புதிய உறவை பெற்றவுடன், தமது பெற்றோருடனான தொடர்பில் பழைய நிலையிலேயே, மாற்றமின்றி இருப்பது இயலாதது என்பது மனதில் கொள்ளவேண்டியது.

இதற்கு அர்த்தம் முழுவதும் தனது புதிய துணையுடனேயே ஒன்றிவிடுதல் என்பதல்ல, ஆனால் புதிய உறவில் சிக்கலின்றி உறுதியான, வலுவான தொடர்புக்கு முன்போன்று, அதே கவனத்தை தனது பெற்றோர் குடும்பத்துடன் செலுத்துவது கடினம் என்பதால் அனுசரணை தேவையாகிறது.

இரு புறத்திலும் புரிந்துணர்வு தேவை என்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். பெற்றோரும் தமது பிள்ளையின் நிலையையும், புரிந்து வாழ வேண்டியது அவசியம், இவ்வாறான அன்பைப் பகிர்ந்து கொள்ளவேண்டிய சூழ்நிலைகள் பல்வேறு நிலைகளிலும் ஏற்படலாம். வயது வேறுபாடுகளுக்கேற்ப அவர்களின் பார்வைகள் வித்தியாசப்படலாம். எனினும், மரபு ரீதின குடும்பங்களைக் கொண்டிருக்கும் நாம், அத்தகைய விழுமியங்களிலிருந்து, மனப்பான்மையிலிருந்து விடுபடாத நாம் உறவு நிலைகளைப் பேணுவதில் சிரத்தை எடுப்பது அவசியம்.

வளர்ந்து செல்லும் கால ஓட்டத்தில் ஆதாரமான நம்பிக்கைகள் கேள்விக் குறியாகும் பட்சத்தில், புரிந்துணர்வு அனுசரனை என்பன கட்டாயமானதாகத் தேவைப்படுகிறது. சிந்திக்க வேண்டியதாகிறது.

- வாசுகி -

# சிக்கனமே சீரிய வாழ்வு

சிக்கனமே சீரிய வாழ்வு என்பது பழமொழியாகும். வாழ்க்கையில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதன்மூலம் - மனதில் நிம்மதியையும், திருப்தியையும் ஒருவர் பெற்றுக் கொள்ளமுடியும்.



சமையலறையில் நெருப்பைப் பற்ற வைக்கத் தொடங்கும்போதே, வாழ்க்கையில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்குவது குடும்பப் பெண் ஒருவரின் பொறுப்பாக அமைகின்றது. இதனால்தான் "உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு" என்ற பழமொழியும் வழங்கப்படுகின்றது.

சமையலறையில் சமையல் செய்கின்றபோது, குடும்ப அங்கத்தவர்களுக்குத் தேவையான உணவு வகைகளைச் சமைத்துக் கொள்ள வேண்டும். அளவுக்கு அதிகமான உணவைச் சமைத்துக் கொள்வதன் மூலம், உணவு வீணாகிவிடுகின்றது. கையிலுள்ள பணமும் வீண் விரயமாகின்றது.

அளவாக சமைப்பது, விருந்தினர்களுக்கு உணவளிக்கக்கூடாது என்பது அர்த்தமல்ல. புதிதாக ஒருவர் வீட்டுக்கு வருகின்றபோது, அளவோடு சமைப்பதால் விருந்தினரை உபசரிக்கமுடியாமல் போய்விடுமே என்ற கேள்வி எழுவது இயல்பானது.

இந்த நிலையில் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். சமையலுக்குத் தேவையான பொருட்கள் சமையலறையில் காணப்படுகின்றன. அந்தப் பொருட்கள் மூலமாக விருந்தினருக்கு உணவு பரிமாறிக் கொள்ளமுடியும் என்ற நம்பிக்கை தோன்ற வேண்டும்.

விருந்தினர் என்பவர் வீட்டுக்கு அடிக்கடி வருபவரல்லர். எனவே, உங்களுக்கென சமைக்கப்பட்டவற்றை அவருக்கும் பகிர்ந்து வழங்கி உண்ணலாம். அல்லது தயாரித்து விற்பனையாகும் உணவு வகைகளை அந்த நேரத்தில் வாங்கிக் கொள்ளலாம். அல்லது சமைத்து விற்பனையாகும் உணவு வகைகளை அந்தச் சமயத்தில் வாங்கி விருந்தினருக்கு உணவளிக்கலாம்.

கிராமப் புறங்களில் வாழ்கின்ற பெண்களிடம் இத்தகைய உணர்வுகள் இருப்பதில்லை. விருந்தினரைக் கண்டவுடனேயே தமது மனங்களில் மகிழ்ச்சி பொங்குவதனோடு, உலையில் பொங்கும் உலை நீரில் விருந்தினருக்குத் தேவையான அரிசியும் விழுந்துவிடும்.

ஆகவே, குடும்பத்திலுள்ள அங்கத்தவர்களுக்கு அளவோடு சமைப்பதன் மூலம், சிக்கனமாயிருந்து கொள்ளமுடியும். இதன் மூலம் பணத்தை விரயப்படுத்துவதைத் தடுத்துக் கொள்ளலாம்.

சமையலறையில் சமைப்பதற்குத் தேவையான பொருட்கள் ஏற்கனவே நிறைந்திருக்கும்போது, அதற்கும் அதிகமான பொருட்களை சமையலறையில் வாங்கிக் குவிப்பது கூடாது.

தேவைக்கதிகமான பொருட்களை வாங்கிக் குவிப்பதில் ஒருவிதமான பயனும் ஏற்படப் போவதில்லை. என்பதோடு, தேவைக்கதிகமான பொருட்கள் பழுதடைந்து போய்விடுவதுடன்,விலை மாற்றங்கள் ஏற்படுவதால், கூடுதலான விலைக்கு பொருட்களை வாங்கவும் முடிகின்றது.

எனவே, சமையலறையில் சிக்கனத்தைப் பேணிக் கொள்வதால், பணம் மிச்சமாகின்றது. சமையலறையை அழகாகவும், சுத்தமாகவும் வைத்திருக்க வழி சமைக்கின்றது.

★




### வாகன சாரதிகளும், பாதசாரிகளும்

# போக்குவரத்து ஒழுங்குகளை பின்பற்றுமாறு தமிழீழ காவல்துறையினர் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

வீதிப் போக்குவரத்தின்போது பாதசாரிகளையும், வாகன சாரதிகளையும் வீதிப்போக்குவரத்து ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடந்துகொள்ளுமாறு, தமிழீழ காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாதசாரிகள் பாதையைக் கடக்கும்போது, மஞ்சள் கோடுகளை அவதானித்துக் கடக்குமாறும், மஞ்சல் கோட்டுப் பகுதியில் நின்று பாதசாரிகள் வீதியைக் கடக்கும்போது, வாகனச் சாரதிகள் அதை அவதானித்து வாகனத்தைச் செலுத்துமாறும், அதி நீளமான லொறிகள்- அதன் பின்புறத்தில் சிவப்பு நிறக் கொடியைப் பறக்கவிடுமாறும் கோரியுள்ளனர்.

வாகனங்களில் கொள்ளளவுக்கு அதிகமாகப் பொருட்களை ஏற்றுவதைத் தவிர்த்துக் கொளளுமாறு கேட்கப்பட்டிருப்பதுடன், பக்கம் பக்கமாகச் சைககிளைச் செலுதததுதல், இரவுவேளைகளில் வெளிச்சமின்றி வாகனங்களைச் செலுத்துவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஏ-9 வீதியல் அதிகரித்துவரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த வாகனச் சாரதிகளும், பாதசாரிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனக் கோரியதுடன், குறிப்பிட்ட வதி முறைகளை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்படை நடமாட்டம் அதிகரிப்பு

முல்லைத்தீவு கடற்பரப்பில், இலங்கை கடற்படையினரின் பீரங்கிப் படகுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

போர்நிறுத்த உடன்பாடு நடைமுறையில் உள்ள சூழலைப் பயன்படுத்தி, கடற்தொழிலாளர்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் கடற்படையினரின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இதனால், முல்லைத்தீவு கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் தொகை வீழ்ச்சியடைந்துள்ளது.

## பெண்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டி

(கிளிநொச்சி)

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவுடன், மாகாண அமைச்சு நடாத்தும் பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த பெண்கள் அணியினர் இந்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 8.30 மணிக்கு இந்தப் போட்டிகள் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

## கட்டைக்காடு கப்பலேந்திமாதா ஆலய வருடாந்த திருநாள்

(கட்டைக்காடு)

கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா ஆலய வருடாந்த திருநாள்- கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நாளை மாலை திருப்பலியும், மறையுரைகளும் இடம்பெறும்.

சிறுவர்களுக்கான தேவநற் கருணை திருவருட்சாதனம் வழங்கும் நிகழ்வு - நாளை மறுதினம் இடம் பெறும்.

எதிர்வரும் 14 ஆம் திகதி மாலை திருப்பலியும் அதனைத் தொடர்ந்து தேவநற்கருணை சுற்றுப்பிரகார [illegible]நாள் திருச்சொருபப் பவனியும் இடம்பெறும்.

திருநாளுக்கான ஆயத்த ஒழுங்குகளை தாளையடிப் பங்குத்தந்தை அருட்திரு ஜே.பிரான்சீஸ் அடிகளார் மற்றும் உதவிப் பங்குத்தந்தை அருட்திரு கான்ஸ்போமர் அடிகளார் ஆகியோர் செய்து வருகின்றனர்.

### முல்லை கல்வி வலயத்தில்

# சிறப்பாக நடைபெற்ற தமிழ்த்தின விழா

முல்லைத்தீவுக் கல்வி வலயத்தின் 2004 ஆம் ஆண்டுக்கான தமிழ்த்தின விழா - நேற்றுமுன்தினம் சிறப்பாக இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு புதுக்குடியிருப்பு மருத்துவமனை முன்பாக, பேரணியுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் - தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப்படம் தாங்கிய ஊர்தி முன்னே செல்ல, தமிழர் பண்பாட்டையும், வரலாற்றையும் சித்திரிக்கும் நிகழ்வுகளும் பின்தொடர்ந்து சென்றன.

இதில் காவடி நடனம், கோலாட்டம் போன்ற பாரம்பரிய நிகழ்வுகளும் இடம்பெற்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பல பாடசாலைகளின் மாணவர்கள் இந்த நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

பேரணியில் ஈழத்துப் புலவர்கள், தமிழ்ப் பெரியார்கள், தமிழ் மன்னர்கள், ஆனையை அடக்கிய அரியாத்தை போன்ற காட்சிப் புனைவுகள் இடம்பெற்றன.

பேரணி நிகழ்விடத்தை அடைந்ததும், பொதுச்சுடரைத் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக்கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றிவைத்தார்.

முலலை மாவட்ட கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா தலைமையில் இடம்பெற்ற அரங்க நிகழ்வில், பொதிகை மலர் வெளியீடும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மாகாண, தேசிய ரீதியிலான போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு மேன்மை மற்றும் கௌரவ விருதுகள் - தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரனாலும், முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் கல்விப் பணிப்பாளர் செ.சுப்பிரமணியம் ஆகியோராலும் வழங்கப்பட்டன.

## நியாப் திட்ட அறிமுகவிழா

நியாப் திட்டம் இரண்டு அறிமுகவிழா - எதிர்வரும் திங்கட்கிழமை கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், நியாப் திட்டம் ஒன்றின் பெறுபேறுகள், நியாப் திட்டத்தின்கீழ் இரணைமடுவின் தேவைகள், செய்திமடல் வெளியீடு, நியாப் திட்டம் இரண்டு தொடர்பான விளக்கங்கள் என்பன இடம்பெறவுள்ளன.

# அகதிகளுக்கு உதவுவதற்கு ஐ.எம்.ஓ. அலுவலகம் !

### மன்னாரில் திறக்கப்பட்டது

(மன்னார்)

இந்தியாவிலிருந்து தாயகம் வரும் அகதிகளுக்கு, மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கென ஐ.எம்.ஓ. அமைப்பின் அலுவலகம் ஒன்று மன்னாரில் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார்- பள்ளிமுனை வீதியில் நேற்றுமுன்தினம் காலை ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த நிகழ்வில், ஐ.எம்.ஒ நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி, மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன், மேலதிக அரசாங்க அதிபர் நிக்லஸ்பிள்ளை, ஐ.எம்.ஒ அமைப்பின் மன்னாருக்கான இணைப்பாளர் சிவசுதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தியாவிலிருந்து வரும் அகதிகளுக்கு, உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்கும் நோக்குடனே இந்த அலுவலகம் திறக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

(201)

## மடு வீதியிலுள்ள சோதனைச் சாவடி 24 மணிநேரமும் திறந்திருக்கும்

மடுத் தேவாலய திருவிழாவை முன்னிட்டு, மடு வீதியிலுள்ள இராணுவத்தினரின் சோதனைச் சாவடி தொடந்து 24 மணிநேரமும் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை யாத்திரிகர்களின் நன்மை கருதியே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# இரணைமடுக்குளத்து நீரை சிக்கனமாக பயன்படுத்தவும்

### நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளர் வேண்டுகோள்

இரணைமடுக்குளத்தில் நீர்மட்டம் குறைந்துள்ளதால், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு இந்தப் பகுதி விவசாயிகளிடம் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தமுறை சிறுபோக நெற்செய்கைக்கு போதியளவு நீரை வழங்குவதற்கு முயற்சித்து வருவதாகவும், விவசாயிகள் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரிய அவர் -

தற்பொழுது இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் 11 அடி 7 அங்குலமாகவும், நீர்க்கொள்ளளவு 12,200 மற்றர் அடியாகவும் இருப்பதாக தெரிவித்தார்.

இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 6,875 ஏக்கர் நிலப்பரப்புக்கும் அதிகமான ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில் இன்று தமிழிசை அரங்கு

சிறப்புத் தமிழிசை அரங்கு ஒன்று இன்று மாலை 4.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், ஜேர்மனியிலிருந்து வருகை தந்திருக்கும் சங்கீத கலாஜோதி ஜெகதா பத்மகாந்தனின் சிறப்புத் தமிழிசை அரங்கு இடம்பெறவுள்ளது.

## முல்லைத்தீவில் குடிநீருக்குத் தட்டுப்பாடு

கடும் வரட்சி காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிவருகிறது.

முல்லைத்தீவின் நட்டாங்கண்டல், கரும்புள்ளியான், பாலிநகர் ஆகிய இடங்களிலேயே குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

புதுக்குடியிருப்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாபெரும் தமிழ்விழா நிகழ்விலிருந்து சில காட்சிகள்...










படங்கள் - ரமணன்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா*
*உள்கோட்டம் இன்மை பெறின்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஜனாதிபதியின் தடுமாற்றம்

விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார வரைபு இப்போது தென்னிலங்கை அரசியலில் பெரும் சர்ச்சைக்குரிய விடயமாகிவிட்டது.

அதுவும்- மாகாணசபைத் தேர்தல்கள் முடிந்த கையோடு இடைக்கால நிர்வாகம் குறித்து பல்வேறு முனைகளிலும் இருந்து பல்வேறு கருத்துக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

விடுதலைப்புலிகளுடன் இனிமேல் அரசாங்கம் பேச்சுக்களை நடத்துவதென்றால் அது இடைக்கால நிர்வாகத்தை அடிப்படையாகக் கொண்டு தான் ஆரம்பிக்க முடியும்.

இந்த நிலையில் தான் இடைக்கால நிர்வாகம் என்றால் தென்னிலங்கை இனவாத சக்திகள் நெருப்புச் சுட்டது போன்று அலறியடித்துக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகாவும் கூட இந்த இடைக்கால நிர்வாக சபையினடிப்படையில் பேச்சுக்களை ஐ.தே.க ஆரம்பித்துவிடும் என்ற அச்சத்தால் தான்- முதலில் பாதுகாப்பு அமைச்சை பறித்து பின்னர் ஆட்சியையே கலைத்துவிட்டுப் புதிய தேர்தலை நடத்தியது.

எதைத் தவிர்க்க ஜனாதிபதி சந்திரிகா நினைத்தாரோ அதை அடிப்படையாக வைத்தே இனிமேல் பேச்சுக்களை நடத்த முடியும் என்ற சிக்கலுக்குள் அவர் சிக்கிப் போயிருக்கிறார்.

ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் புலிகளுடன் பேச்சு நடத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதுடன் நின்று விடாமல்- ஆட்சியை கவிழ்த்துவிடுவோம் என்று மிரட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் தான், ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது செயலகமும் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வெளியிட்டு தாமும் குழம்பிப்போய், மக்களையும் குழப்பத்தில் ஆழ்த்தி விடுகின்றன.

ஆளும் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுவில் இடைக்கால நிர்வாகத்தின் அடிப்படையில் பேசத் தயார் என்று ஒருபோதுமே தான் கூறவில்லை என தெரிவித்த சந்திரிகா -

இப்போது அப்படி எதுவுமே கூறவில்லை என்று மறுத்திருக்கிறார். ஜனாதிபதி செயலகம் மூலம் இந்த மறுப்பு வெளியிடப்பட்டிருந்தது. ஒரு விடயத்தை ஜனாதிபதி கூறுவதும், பின்னர் அதையே கூறவில்லை என்று மறுப்பதும் வாடிக்கையாகிவிட்டது.

முன்னரும் ஒரு தடவை ஜனாதிபதி சார்பில் அவரது செயலகம் வெளியிட்ட அறிக்கையையே ஜனாதிபதியின் சார்பில் அவரது பேச்சாளர் ஹரீம் பீரிஸ் மறுத்திருந்தார்.

ஜனாதிபதியின் சார்பில் அவரது செயலகம் விடுத்த அறிக்கையையே நிராகரித்த செயலகத்தின் கருத்து ஜனாதிபதியின் கருத்தல்ல என்று மறுப்பு வெளியிட்டது கேலிக்கிடமான ஒரு கருத்தேயாகும்.

இப்படி நாட்டு மக்களை வெறும் அடிமுட்டாள்களாகக் கருதி அரசியல் நடத்த முற்படுவது ஜனாதிபதிக்கோ, அவரது செயலகத்துக்கோ நல்லதல்ல.

அண்மைக்காலத்தில் இப்படி ஏற்பட்ட கருத்தை ஜனாதிபதி சார்பில் வெளியிடப்படுவதும் மறுக்கப்படுவதும் இது இரண்டாவது சந்தர்ப்பமாகும்.

எவ்வாறாயினும் ஜனாதிபதி சந்திரிகா இடைக்கால நிர்வாகம் தொடர்பாக உறுதியான நிலைப்பாடொன்றை வெளிப்படுத்தவோ- எடுக்கவோதாமதித்து வருவதுதான் இத்தகைய நிலைமைக்கு காரணமாகும்.

இப்போதும் கூட ஜனாதிபதி சந்திரிகா என்ன செய்யப் போகிறார் என்ற கேள்வி அனைவரிடமும் இருந்து கொண்டிருக்கிறது. புலிகளுடன் பேசப்போகிறாரா? அல்லது தனது பதவியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக ஜே.வி.பியுடன் இணைந்து அரசியல் நடத்தப் போகிறாரா? என்பதே இப்போதுள்ள முக்கிய கேள்வி.

ஜனாதிபதி முரண்பட்ட போக்கில் நடந்து கொண்டு- புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கான சூழலை ஏற்படுத்திவிட முடியாது. இதனால்தான், அலுத்துப்போய் நோர்வே அரசு ஒதுங்கிப் போகும் என்று முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இப்படியே நிலைமை நீடித்துக் கொண்டிருந்தால் சமாதான முயற்சிகள் என்பது சந்திரிகாவினால் மட்டுமன்றி எவராலும் தொடரப்பட முடியாத கட்டத்திற்குச் சென்று விடக்கூடும்.

இடைக்கால நிர்வாகத்தின் அடிப்படையில் பேசப்படுவது தவிர்க்கப்பட முடியாத விடயமாகிவிட்ட நிலையில்- ஜனாதிபதி சந்திரிகா மட்டும் முன்னுக்குச் செல்வதா?, பின்னுக்குச் செல்வதா? என்று தடுமாறிக் கொண்டிருப்பது- அரசியலில் தடுக்கி விளக்காரணமாகிவிடவும் கூடும்.

## நாடும் நடப்பும்




# யாழ்.பல்கலைக்கழகத்திற்கு 36 மில்லியன் ரூபா நிதியுதவி

## உலகவங்கி ஒதுக்கியது

உலகவங்கியின் நிதியுதவியுடன் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது-

உலகவங்கியால் நான்கு வேலைத்திட்டங்களுக்காக 36 மில்லியன் ரூபா பணம் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அவை -

மாணவர் நலன் பேண் செயற்பாடுகள், தகவல் தொழில் நுட்ப விருத்தி, சமூகநல்லிணக்கச் செயற்பாடுகள், ஆங்கிலக் கல்வி விருத்தி முதலிய நான்கு வேலைத்திட்டங்களுக்காகவே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டங்கள் பல்கலைக்கழகத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளால் தனித்தனியாக செயற்படுத்தப்படும். அதற்கான நிதிகள் பங்கீட்டடிப்படையில் வழங்கப்படும்.

இதேபோல், உலக வங்கியின் நிதியுதவியுடன் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடமும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளையும் நாம் எடுத்து வருகிறோம்.

மருத்துவபீடமானது மேலும் பல வசதிகளைப் பெற வேண்டிய நிலையிலேயே இயங்கிவருகிறது.

அவ்வாறான வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலமே மருத்துவபீட மாணவர்கள் தரமான கல்வியைப் பெறமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# சீருடையுடன் வராத பணியாளர்களை திருப்பி அனுப்புமாறு அறுவுறுத்தல்

(கொழும்பு)

சீருடையுடன் பணிகளுக்கு வருகைதர மறுக்கும் வைத்திய சாலை ஊழியர்களைத் திருப்பியனுப்புமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

விசேடமாக வைத்தியசாலைகளில் பணிபுரியும் கனிஷ்டதர ஊழியர்கள் குறிக்கப்பட்ட தமது சீருடையுடன் பணிக்கு வருகை தராதவிடத்து அவர்களைப் பணிசெய்யாது வீட்டுக்குத் திருப்பியனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# முன்னாள் எம்.பிக்கள் 9 பேருக்கு எதிராக கொழும்பு நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

உத்தியோகபூர்வ இல்லங்களில் பலாத்காரமாகத் தங்கியிருக்கும் ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள்மீதும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறுகோரி, கொழும்பு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை இழந்துவிட்ட பின்னரும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களைவிட்டு வெளியேறாது சட்டவிரோதமான முறையில் அங்கு தொடர்ந்தும் தங்கியிருப்பதாகத் தெரிவித்து, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 5 பேரும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் 3 பேர், புளொட் அமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் என மொத்தமாக 9 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றத்தில் பொது நிர்வாக அமைச்சின் நிர்வாகப் பணிப்பாளர் கருணாரதனவினால் அரச இல்லங்களை மீளப்பெறும் உரிமைச சட்டத்தின்கீழ் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கற்பிட்டிப்பொல வீடமைப்புத் தொகுதி வீடுகளில் தொடர்ந்து வசித்துக்கொண்டிருப்பதாகவும், அவர்கள் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இல்லை என்றும், ஆனால், அவர்கள் தொடர்ந்தும் அதில் வசித்துவருவதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரியும் இந்த இல்லத்தில் தற்போதும் தங்கியுள்ளார். அவர்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமையும் புரியாத புதிராகவே உள்ளதாக கருணாரத்ன மேலும் தெரிவித்தார்.

# எச்.என்.டி.ஏ மாணவர்கள் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பு

## நாளை மறுதினம் நடைபெறவுள்ளது

உயர் தேசிய கணக்கியல் மற்றும் வர்த்தக டிப்ளோமாதாரிகளுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையேயான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் காலை 9 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள உயர் தொழிநுட்பக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்.செயலகம் முன்பாக இடம்பெறவுள்ள மறியல் போராட்டம் உட்பட பல முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதாகவும், இதில் அனைத்துக் கணக்கியல் மற்றும் வர்த்தக டிப்ளோமாதாரிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு உயர் தேசிய கணக்கியல் மற்றும் டிப்ளோமாதாரிகள் சங்கம் கேட்டுள்ளது.

இதேவேளை வேலைவாய்ப்பு வழங்கக்கோரி கணக்கியல் மற்றும் வர்த்தகடிப்ளோமாதாரிகளால் நடாத்தப்படவுள்ள போராட்டங்களுக்கு நாட்டிலுள்ள அனைத்து உயர் தொழிநுட்பக் கல்லூரி மாணவர்களையும் ஆதரவு வழங்குமாறுகோரி, யாழ.மாவட்ட வேலையற்ற கணக்கியல் மற்றும் வர்த்தக டிப்ளோமாதாரிகள் சங்கத்தால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

# மக்களுக்கு நெருக்கமான கட்சியாக ஐ.தே.கட்சியை மாற்றத்திட்டம்!

மக்களுக்கு மிகவும் நெருக்கமான ஒரு கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியை மாற்றியமைக்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச் செயலாளராகப் பதவியேற்றுள்ள வீரகொட தெரிவித்தார்.

பதவியேற்ற பின்னர் அவர் மேலும தெரிவிக்கையில் -

கட்சியின் பொதுச் செயலாளர் என்ற வகையில் கட்சியை மறுசீரமைப்பதற்கான அதிக பொறுப்பு இருக்கிறது. இனிவரும் காலங்களில் கட்சியை மறுசீரமைப்பதற்கான அதிக பொறுப்பு இளைஞர்களிடமே வழங்கப்படவுள்ளது.

இதன்மூலம் கட்சியின் பலம் அதிகரிக்கப்படும் என்பதோடு, கட்சியின் வளர்ச்சிக்கான புதிய அடித்தளத்தையும் இட முடியும்.

இவருடன் மிலிந்த மொறகொட, ஹேமகுமார நாணயக்கார, கெஹெலிய ரம்புக்வெல்ல, கபீர் காஸீம் ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இவ்வார பலன்கள்

## 06-08-2004 12-08-2004

| | | | |
|---|---|---|---|
| சந் | ராகு | | சுக் சனி |
| யுரே | 06 கா. 9.51 மே-சந்<br>08 இ. 8.21 இட-சந்<br>11 கா.9.00 மிது-சந் | | சூ |
| நெப் | | | செவ் புத குரு |
| | | கேது | |

### மேடம

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு நன்மை, தீமை கலந்த பலன்களைக் காட்டும். குடும்பத்தில் சில பிணக்குகள் ஏற்பட்டாலும் அவை உடனுக்குடன் சரி செய்யப்படும். தேகசுகம் சிறிது பாதிக்கப்படலாம். திருமணப் பேச்சுக்கள் கால தாமதத்தைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புக்கள் அதிகமாகும். அதிகாரிகளின் விருப்பத்துக்கேற்ப செயற்படுவது நன்று. வர்த்தகர்களுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். தனித்தொழில் செய்வோருக்கு லாபம் இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஊக்கமெடுத்தல் வேண்டும். முன்னேற்றம் உண்டு.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசிக்காரருக்கு குடும்பத்தில் அமைதியும், மனநிறைவும் காணப்படும். வீட்டில் கொண்டாட்டங்கள் அதிகரிக்கும். வருவாய் ஓரளவு திருப்திகரமாக அமையும். குடும்பப் பெண்கள் திருப்தியுடன் காணப்படுவர். தனித்தொழில் புரிபவர்களுக்கு வருவாய் அதிகரிக்கும். திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு ஆதரவு கூடுதலாகக் கிடைப்பினும், வேலைப்பளு அதிகமாகவே இருக்கும். வியாபாரிகளுக்கு வியாபாரம் சிறப்பாக நடந்தாலும் பணச் சேர்க்கை குறையும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமுடையவர்களாகக் காணப்படுவர். ஆசிரியர்களின் ஆதரவு உண்டு.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் பல பிரச்சினைகள் உருவாகிக் கொண்டிருக்கும். பிள்ளைகளால் தொல்லைகள் கூடும். எதிர்பாராத பண விரயங்கள் ஏற்படக் கூடும். வருவாய் இருந்தாலும், செலவுகள் மிதமிஞ்சிக் காட்டும். தேகசுகம் இடையிடையே பாதிக்கப்பட்டு மருத்துவச் செலவு அதிகமாகும். திருமணப் பேச்சுக்கள் நிறைவுபெறாது. உத்தியோத்தர்களுக்கு வேலைப்பளு கூடுதலாக இருப்பினும் சக தொழிலாளரின் உதவி கிடையாமல் போகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலை கானும். முதலீடுகள் தேங்கிக் கிடைக்கும். மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவாகவே இருக்கும். சகமாணவருடன் பிணக்கு ஏற்படும்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியில் பிறந்தவர்களுக்கு சிறுமனக் குழப்பங்கள் ஏற்பட்டு மறையும். தொடங்கும் கருமங்கள் தங்கு தடையின்றி நிறைவேறும். பெரியோர்களின் உதவி உண்டு. பண வருவாய் ஓரளவு நன்றாகவே [illegible]யும். குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். தேகாரோக்கியம் சுமாராக இருக்கும் உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகமாக இருக்கும். பொறுப்புகள் அதிகரிக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தல் [illegible]றைந்த லாபமே கிடைக்கும். வியாபாரம் சம்பந்தமா[illegible] [illegible]ரயாணங்கள் அலைச்சலைக் கொடுக்கும். மாணவர்கள் மத்திம முன்னேற்றம் அடைவார்கள்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப உறவுகள் சிறப்பாக இருக்கும். இனபந்துக்களால் நன்மைகள் உண்டு. புத்திரர்களால் உதவிகள் கிட்டும். திடீர் வருவாய் கிடைக்கலாம். பொருள் வரவு நன்றாக இருக்கும். தேகசௌக்கியம் அதிகம் பாதிப்படையாது. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் சற்றுத் தாமதமாகி நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். அதிகாரிகளின் பாராட்டுக்களும் உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபார நடவடிக்கைகள் நன்றாக அமையும். நிகரலாபம் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவர். சிலருக்கு உயர் கல்வி கிட்டும்.

### கன்னி

(உத்தரம் 2; 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)



கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்வில் மகிழ்ச்சி உண்டாகும். நினைத்த காரியங்கள் இலகுவில் அனுகூலமாகும். அந்நிய தேசத்திலிருந்து பொருள் வரவு கிட்டும். இனபந்துக்களின் உறவு வலுக்கும். தேகசௌக்கியம் நன்றாக அமையும். திருமணப் பேறுகள் கைவரப் பெறும். உத்தியோகத்தர்களுக்கு செல்வாக்கு உயரும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கக் கூடும். தனித்தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். வங்கி உதவிகளும் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவார்கள். பரீட்சைகள் திருப்தியாக இருக்கும்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சில சச்சரவுகள் தோன்றி மறையும். வருவாய் இருப்பினும் செலவுகளும் அதிகரிக்கும். உறவினர்களுடன் சில மனத்தாங்கல்கள் தோன்றக் கூடும். புத்திரர்களின் உதவி எதிர்பார்க்க முடியாது. தேகசுகத்தைப் பேணிக் கொள்வது நன்று. திருமணப் பேச்சுக்கள் தாமதமாகி நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் இருக்கும். சக தொழிலாளிகளின் உதவி கிடையாது. முன்னேற்றங்கள் தடைப்படும். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் பல சிக்கல்கள் தோன்றும். சிறு திருட்டுக்கள், பொருள் சேதங்கள் ஏற்படலாம். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் குறைந்து காணப்படுவர்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிக இராசியில் பிறந்த குடும்பஸ்தர்களுக்கு இல்லற வாழ்வில் சிறுசிறு பூசல்கள் அவ்வப் போது தோன்றும். வருமானத்திலும் பார்க்க செலவு அதிகமாகும். தேகாரோக்கியம் சிறிது பாதிக்கப்படலாம். பெண்கள் அலங்காரப் பொருட்களை விரும்புவதைக் குறைத்துக் கொள்ளவும். திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையைக் காட்டும். நண்பர்கள் பகைமை பாராட்ட நேரிடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புக்கள் அதிகரிக்கும். புதிதாக உத்தியோகத்தை விரும்புபவர்களுக்கு வாய்ப்புக்கள் குறைவாக இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சாதாரண நிலையல் இருக்கும். முதலீடுகளைக் குறைத்துக் கொள்வது நன்று. மாணவர்கள் சாதாரண முன்னேற்றம் அடைவர்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசு இராசியில் பிறந்த குடும்பஸ்தர்களுக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும். இனபந்துக்களால் உதவி கிட்டும். புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டாகும். தொடங்கும் கருமங்கள் வெற்றிகரமாக முடியும். வருமானம் அதிகரிக்கும். தேகசௌக்கியம் பாதிப்படையாது. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். வர்த்தகர்களுக்கு கூடிய லாபம் கிடைக்கும். புதிய முதலீடுகளுக்கு நன்று. கொடுக்கல் வாங்கல் திருப்தியளிக்கும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவுகளும் உயர்ச்சிகளும் கிடைக்கும். சிலருக்கு வசதியான இடமாற்றங்கள் கிடைக்கலாம். மாணவர்களுக்கு முன்னேற்றமுண்டு. ஆசிரியர்களின் பாராட்டைப் பெறுவர்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியில் பிறந்த குடும்பஸ்தர்களுக்கு இல்லறம் நல்லறமாக அமையும். கணவன் மனைவி உறவுகள் சிறப்பாக இருக்கும். திடீர் பண வரவு ஏற்படலாம். தேகசுகம் பாதிப்படையாது. திருமண விடயங்கள் கைகூடும். இனபந்துகள் அயலவர்களின் உதவி உண்டு. உத்தியோகத்தர்களுக்கு சகதொழிலாளர்களின் ஒத்துழைப்பும் அதிகாரிகளின் ஆதரவும் உண்டு. சம்பள உயர்வு கிடைக்க இடமுண்டு. வர்த்தகர்களுக்கு முதலீடுகள் விற்பனையாகிக் கூடுதல் லாபம் கிடைக்கும். வங்கி உதவிகளும் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் நட்டம் அதிகமாகும். பரீட்சைப் பெறுபேறுகள் நன்று.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )*



கும்பராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அமைதிக் குறைவு கானும். குடும்ப அங்கத்தவர்களிடையே கசப்புணர்வு தோன்றும். புத்திரர்களால் மனக்கவலை ஏற்படும். தொழில்துறை நன்றாக இருந்தாலும், வருமானம் குறைவாகவே இருக்கும். தேகாரோக்கியம் இடையிடையே பாதிப்படையும். மருத்துவச் செலவுகளும் தவிர்க்க முடியாமல் இருக்கும். பெண்கள் சிக்கனத்தைக் கையாள வேண்டும். உத்தியோகத்தவர்களுக்கு வேலைப் பொறுப்புக்கள் கூடுதலாக இருக்கும். ஊழியர்களிடையே பிணக்குகள் தோன்றும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் குறைவாகவே நடக்கும். வங்கி உதவிகள் உரிய நேரத்தில் கிடையாமற் போகும். மாணவர்களுக்கு உடல் நிலை சீராக இல்லாததால் கல்வி முன்னேற்றம் பாதிக்கப்படும்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியில் பிறந்தவர்களுக்கு இல்லற வாழ்வில் ஒற்றுமை வலுக்கும். சகோதரர்களின் உதவி கிடைக்கும். பிறநாட்டிலிருந்து பணவரவு ஏற்படலாம். தேகாரோக்கியம் சீராக இருக்கும். வீட்டில் சுப நிகழ்வுகள் ஏற்படலாம். திருமணப் பேச்சுக்கள் விரைவில் நல்ல முடிவைத் தரும். பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். உத்தியோகத்தர்களுக்கு செல்வாக்கு உயரும். அதிகாரிகளின் உதவி உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றமடையும். புதிய வாடிக்கையாளர்கள் வந்து சேருவார்கள். மாணவர்கள் ஊக்கத்துக்கேற்ப முன்னேற்றம் காண்பர்.

- வரணியூர் ஜெயா

---

மருத்துவ அறிவியல்

# ஆரோக்கியமான சமூக கட்டுமானமே உறுதியான பொருளாதாரம்



இன்று புகைத்தல் காரணமாக சுவாச நோய்கள் அதிகரித்துக் காணப்படுவதோடு, புகைப் பிடிப்பதால் அதன் சூழலில் நெருங்கி இருக்கும் அனைவரையும் பாதிக்கின்றது. இன்றைய கலாசார மோகமானது புகைப்பிடித்தலைத் தூண்டி சிறியோர். பெரியோர் என்ற வேறுபாடின்றி பரவல் அடைந்து காணப்படுவதோடு புகைப்பிடித்துக் கொண்டே வாகனம் ஓட்டுதல், அலுவலகத்தில் வேலை பார்த்தல் என்பனவும் சர்வசாதாரணமாக இடம்பெறுகின்றன.

ஆனால், இவையாவும் சட்டப்படி குற்றமான செயலாகக் காணப்பட்ட போதும் அவை பெருமளவில் கைக்கொள்ளப்படாமை கவலைக்குரியதொன்றே. எனவே, தான் இவை தொடர்பான ஓர் விழிப்புணர்வை தூண்டுவதாக இந்தக் கட்டுரை அமைகின்றது.

காபனீரொட்சைட்டை உடலிருந்து வெளியேற்றவும் உடலுக்கு ஒட்சினைப் பெற்றுக் கொள்ளவும் மனித உடலில் விசேடமாகக் காணப்படும் தொகுதியே "சுவாசத்தொகுதி" ஆகும். மனித சுவாசத் தொகுதி ஒரு கோடி நுரையீரல்களையும் அவற்றுக்குள்ளேயும் அவற்றிலிருந்து வெளியேயும் வளியைக்கொண்டு செல்லும் குழாய்களையும் கொண்டுள்ளது.

மூக்குத் துவாரங்கள் சுவாசப்பாதையின் ஆரம்பப் பகுதியாகும். மூக்குக் குழிகளின் உட்சுவர்கள் பதனிடப்பட்டுள்ள கலங்களில் "பிசிர்" எனப்படும். பெருந்தொகையான சிறு முனைகள் காணப்படுகின்றன. இந்தக் கலங்களால் "சீதம்" சுரக்கப்படுகின்றது.

மூக்கு குழியினூடாக வளி செல்லும் போது அந்த வளியில் அடங்கியுள்ள துணிக்கைகளும் பற்றீரியாக்களும் இச்சீதத்தில் ஒட்டிக் கொள்வதோடு தூசி, துணிக்கைகளும் பிசிர்களின் அசைவு காரணமாக தொண்டையை நோக்கி தள்ளப்படுகின்றன. மூக்குக் குழியைக் கடந்து செல்லும்போது வளியின் வெப்பநிலை உடல் வெப்பநிலைவரை அதிகரித்து சமப்படுகின்றது.

நாம் உள்மூச்சு வாங்கும்போது விலா என்புகளுக்கிடையே காணப்படும் பழுவுக்கிடையிலான தசைகள் சுருங்குகின்றன. இதன் காரணமாக விலா என்புகள் மேல் நோக்கியும் முன்னோக்கியும் அசைகின்றன. அத்தோடு, பிரிமென்றகட்டின் தசைகளும் சுருங்குகின்றன. இதன் காரணமாக பிரிமென்றகட்டின் வளைவு குறைய நெஞ்சின் கனஅளவு அதிகரித்து நுரையீரல் விரிவடைகின்றன. இவ்வேளை நுரையீரலினுள் நிலவும் அமுக்கம் வளிமண்டல அமுக்கத்தை விட குறைவதால் சுவாசப்பாதையூடாக வளிநுரையீரனுள் புகுந்து சிற்றறைகளை வளியினால் நிரப்புகின்ற இந்தத் தொழிற்பாடு "உட்சுவாசம்" எனப்படுகின்றது.

இதேபோல், இதன் மறுதொழிற்பாடு நிகழ்ந்து நுரையிரனுள்ள வளி வெளியேற்றப்படும் நிலை "வெளிச்சுவாசம்" எனப்படுகின்றது.

இவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு நியம அடிப்படையில் நிகழும் மனித சுவாசத் தொகுதியில் நோய்கள் பல்வேறு காரணங்களால் தோன்றுகின்றன. இவற்றில் புகைத்தல் ஒரு முக்கிய காரணமாக அமைகின்றது.

பொதுவாக இன்று எல்லோராலும் விரும்பிப் பாவிக்கப்படும் சிகரெற்றினை எடுத்துக் கெண்டால் இதன் புகை ஒரு தனிப் பதார்த்தமன்று. இது நிக்கற்றீன், காபனோரொட்சைட்டு, ஐதரசன்சயனைட்டு போன்ற பல நச்சுப் பதார்த்தங்களின் கலவையாகும்.

புகையை ஒவ்வொரு தடவையும், உள்ளிழுக்கும்போது புகையில் அடங்கியுள்ள இந்தப் பதார்த்தங்களில் 90வீதம் உடலினுள் தேங்குகின்றன. சிகரெற்று புகையில் அடங்கியுள்ள நிக்கற்றீன் (தார்) நுரையீரல்கள், தொண்டை, குரல்வளை போன்ற பல்வேறு உறுப்புக்களில் பதிகின்றன. இச்சகரெற்றுத்தாரில் அடங்கியுள்ள இரசாயனப் பதார்த்தங்கள் காலம் செல்லும்போது அவ்வுறுப்புக்களில் புற்றுநோய் தோன்றுவதற்கு ஏதுவாக அமைகின்றன.

நம் சுவாசத்தொகுதியானது உட்சுவாசத்தின்போது சுவாசக்குழாய்களில் காணப்படும் பிசிர்களால் சுத்திகரிக்கப்படுகின்றன. ஆனால், சிகரெற்றுப் புகையில் அடங்கியுள்ள நச்சுப் பதார்த்தங்கள் காரணமாக இப்பிசிர்கள் செயலிழக்கின்றன. இதனால், உட்சுவாசவளி சுத்திகரிப்பது தடைப்படுகின்றது. இதன்காரணமாக இவர்களுக்கு "சுவாசப்பைக் குழாய முற்சி" போன்ற சுவாசப்பாதை நோய்களும் ஏனைய நுரையீரல் நோய்களும் தோன்றுகின்றன. மேலும் இதன் காரணமாக அன்றாடம் இருமலும் தோன்றி வலுவடைகின்றது.

இவற்றினை விட சிகரெற்றுப் புகை கெட்டியாவதால் தோன்றும் தார் நுரையீரல்களுக்குள் வளியைக் கொண்டு செல்லும் நுண்ணிய குழாய்களை அடைத்து விடுவதால் நுரையீரல் இழையங்கள் சிதைவுறுகின்றன. இதன் விளைவாக நுரையீரல்களின் திறன் குறைவடைந்து விரைவில் களைப்பு தோன்ற வழிவகுக்கின்றது.

இவ்வாறே ஏனைய பீடி, சுருட்டுப் போன்ற புகைப்பிடித்தலை மேற்கொள்கின்ற போதும் பாதிப்புக்கள் தோன்றுகின்றன. இவை இதைப் பாவிக்கும் பாமர மக்கள் பலர் அறியாதிருப்பதும் அப்படி அறிந்திருந்தும் அதை அலட்டிக் கொள்ளாது காணப்படுவதுமே இன்றைய அறுவடையின் விளைவாகும்.

எனவேதான் இனிமேலாவது புகைப் பிடிக்கும் ஒவ்வொருவரும் அதன் பக்கவிளைவுகள், பின்விளைவுகள் என்பவற்றினை அறிந்து அதனை நிறுத்திக் கொள்ளுதல் அவர்களுக்கும், சமூகத்துக்கும் ஆரோக்கியமானதாகும்.

ஒருவர் புகைப்பிடிப்பதால் மன உளைச்சல், சமூகத்தின் வெறுப்பான பார்வை, கால், கை நடுக்கம், சோர்வு, பசியின்மை, தூக்கமின்மை, எதற்கெடுத்தாலும் எரிந்து விழுதல், பாலியலில் நாட்டங்குறைவு, குரலில் மந்தம் என்பவற்றை எதிர்நோக்குவதோடு, கசம், புற்றுநோய் என்ற பாரிய நோய்த்தாக்கத்துக்கும் ஆட்பட நேரிடும்.

எனவேதான் புகைப்பிடிப்போர் புகைப் பிடிப்பதால் தாமும் கொட்டு, அவர்களால் வெளியிடப்படும் புகையினை ஏனையோர் சுவாசிப்பதால் அவர்களையும் கெடுத்துவிடுகின்றனர். இவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய கடமைகள்,

1. வாகனம் ஓட்டும்போது புகைப்பிடித்தல் கூடாது.
2. மக்கள் நெருக்கமாக இருக்கும்போது புகைத்தலை தவிர்த்தல்.
3. புகையிரதம், பேருந்துகளில் புகைப் பிடிப்பதை தடைசெய்தல்.
4. அலுவலகங்களில் புகைப்பிடித்தலை முற்றாக நிறுத்துதல்.
5. ஒருவர் புகைப்பிடிப்பதால் உள அல்லது உடல் ரீதியாக யாது மொருவருக்குப் பாதிப்பு ஏற்படும் என கருதும் எந்தபொரு இடத்திலும் புகைப் பிடித்தலை தவிர்த்தல்.
6. ஒவ்வொரு குடிமகனும் புகைத்தலை முற்றாக தடைசெய்ய தம்முள் உறுதி பூணுதல்.

இப்படிப்பட்ட செயற்பாட்டின் மூலம் புகைத்தல் அரக்கனை ஒழித்து ஆரோக்கியமாக ஒரு சமூகத்தினை கட்டியெழுப்பமுடியும். ♦

# ரஷ்யாவில் ஹெலிவிபத்து; விமானி உட்பட 16 பேர் பலி!

ரஷ்யாவில் இடம்பெற்ற ஹெலி விபத்தில் விமானி மற்றும் அதில் பயணம் செய்த 15 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் ரஷ்யாவின் மேற்குப் பகுதியான சைபீரியாவில் கஸகஸ்தான் எல்லைப் பகுதிக்கருகில் நேற்று இடம் பெற்றதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான எம்.8 ஹெலிகொப்ரர் பறப்பினை ஆரம்பித்து சிறிதுநேரத்திலேயே தொடர்பினை இழந்து விட்டதாக ரஷ்யாவின் அவசரகால அமைச்சுப் பேச்சாளர் தெரிவித்தார்.

விபத்துக்குள்ளான ஹெலி தீப்பிடித்து முற்றாகவே எரிந்து விட்டதாகவும், அதிலிருந்த விமான ஓட்டி மற்றும் பதினைந்து பயணிகளும் உயிரிழந்து விட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

காடுகளைக் கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஹெலியே விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு மீட்புப் பணியாளர்களும், மருத்துவ உதவியாளர்களும் சென்றுள்ளனர்.

## சூப்பர் கம்பியூட்டருக்கு கல்பனா சாவ்லா பெயர்

### நாஸா விஞ்ஞானிகள் சூட்டினர்

அமெரிக்காவில் உள்ள நாஸா விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் உள்ள சூப்பர் கம்பியூட்டருக்கு இந்தியாவில் பிறந்த விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கொலம்பியா விண்கலம் பூமிக்குத் திரும்பியபோது, வெடித்துச் சிதறியது. இதில் கல்பனா சாவ்லா உட்பட 7 பேர் பலியாகினர். கல்பனா நினைவாக கம்பியூட்டருக்கு அவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது. வழக்கமாக சூப்பர் கம்பியூட்டருக்கு கம்பியூட்டர் துறை முன்னோடிகள் பெயர் சூட்டப்படும். இந்தமுறை முதன்முதலாக விண்வெளி வீராங்கனை பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானில் ஹெலி விபத்து நால்வர் பலியானதாகத் தகவல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் இராணுவக் ஹெலிகொப்ரர் அந்த நாட்டின் வடமேற்குப் பகுதியிலுள்ள மலைப் பகுதியில் விபத்துக்குள்ளானதில் நால்வர் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் பொலிஸார் தெரிவித்தனர்.

எம்17 ஹெலிகொப்ரர் ராவல் பிண்டியிலிருந்து வடக்கு மாகாணமான வசிரிஸ்தான் பகுதிக்குச் சென்று கொண்டிருக்கையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இது ஒரு விபத்து, இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விபரங்களைப் பெறுவதற்கு முயற்சி செய்து வருகின்றோம் என சிரேஷ்ட இராணுவ அதிகாரியான சௌகத் சுல்தான் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த நான்கு பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்தாக சம்பவம் இடம்பெற்ற கராக் மாகாண அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஹெலிகொப்ரரில் ஏற்பட்ட தீ காரணமாக இந்த விபத்து இடம்பெற்றதாகவும், மேலும் பல சடலங்கள் அந்தப் பகுதியில் இருக்கலாமெனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த வருடம் இராணுவக் ஹெலிகொப்ரர் விபத்துக்குள்ளானதில் 13 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.



ஜப்பானின் என்.இ.சி எலக்ரோனிக் நிறுவனம் புதிய கமரா மொபைல் போனை உருவாக்கியிருக்கிறது. ஒருதுண்டு சீட்டு போல இருக்கும் இந்த கமரா மொபைல் போன்தான் உலகிலேயே மிகச் சிறிய மெலிதான மொபைல்போன் ஆகும்.

ஜப்பானின் பிரபலமான என்.இ.சி நிறுவனத்தின் இந்த ஆண்டு இலாபம் 30 மடங்கு அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு இந்த நிறுவனத்தின் இலாபம் 19 கோடி டொலராக இருந்தது.

### சிம்பாப்வே தலைநகரில்

## இரண்டு ரயில்கள் மோதியதில் 70 பயணிகள் காயமடைந்தனர்

சிம்பாப்வே தலைநகர் ஹராரேயில் இரண்டு ரயில்கள் மோதிக்கொண்டதில் 70 பயணிகள் காயமடைந்தனர்.

சிம்பாப்வே நாட்டின் தலைநகர் ஹராரே. இங்குள்ள ரயில்நிலயத்தில் நேற்றுமுன்தினம் ஒரே தண்டவாளத்தில் இரண்டுரயில்கள் அடுத்தடுத்து வந்தன. ரயில் நிலையத்தை நெருங்கியதும் முதலில் வந்தரயில் வேகத்தைக் குறைத்தது. அப்போது பின்னால் வந்தரயில் வேகத்தைக்கட்டுபடுத்த முடியாமல் முன்னால் நின்றரயில்மீது மோதியது. ரயில்நிலையத்திலேயே நடந்த இந்த விபத்தில் நான்கு ரயிற்பெட்டிகள் கவிழ்ந்தன. இந்தச்சம்பவத்தில் 70 பயணிகள் படுகாயமடைந்தனர். அதில் மூன்று பேரின்நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

இந்தவிபத்திற்கு மனிதத் தவறே காரணம் என்று அந்த நாட்டின் போக்குவரத்துத்துறை இணை அம்மைச்சர் அன்ட்ரூ லங்கா கூறினார்.

### ஜனாதிபதித் தேர்தலில் வென்றால்

## ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளை திரும்பி அழைப்பாராம் ஜோன்ஹெரி

(வாஷிங்ரன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஜோன் ஹெரி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுவருகிறார். டொபுக் என்ற இடத்தில் நடந்த பேரணியில் அவர் கலந்துகொண்டு பேசியபோது நான் தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதியானால் ஈராக்கில் இருந்து அமெரிக்கராணுவத்தை கௌரவத்துடன் நாடு திரும்புமாறு அழைப்பேன் என்று வாக்குறுதி அளித்தார்.

ஈராக் போர் காரணமாக அமெரிக்காவின் நண்பர்களை புஷ் அன்னியப்படுத்தி ஒதுக்கிவிட்டார். ஜனநாயகக்கட்சியின் ஆட்சி ஏற்பட்டால உலக நாடுகளுடன் அமெரிக்கா நட்புடன் நடந்துகொள்ளும் என்று ஹெரி கூறினார்.

## பயங்கரவாத சந்தேக நபர்கள் 13 பேர் இங்கிலாந்தின் பல பகுதிகளில் கைது



இங்கிலாந்தின் பல பகுதிகளிலும் கைது செய்யப்பட்ட 13 சந்தேகநபர்கள் மீது புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தவுள்ளனர்.

இந்தப் 13 பேரும், கடந்த செவ்வாய் வடக்கு லண்டன், ஹேட் போட்சிறி, லூதன் மற்றும் பிளக்போன் போன்ற நகரங்களிலிருந்து கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் அனைவரும் 20 தொடக்கம் 30 வயதுக்கிடைப்பட்டவர்களெனவும், பயங்கரவாத நடவடிக்கைகளைத் தூண்டுதல், அதற்கான தயாரிப்பு வேலைகளில் ஈடுபடுதல் போன்ற காரணங்களினாலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும் பிரிட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரும் ஆசிய நாட்டவர்களெனவும், இவர்களில் எத்தனை பேர் பிரிட்டன் நாட்டுப் பிரஜாவுரிமை பெற்றவர்களென்பது தெரியவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கை சர்வதேச பயங்கரவாதத்துக்குகெதிராகப் படையினரும், பொலிஸாரும், மேற்கொண்டுவரும் தொடர் நடவடிக்கையின் ஒருபகுதியே என பிரிட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் விசாரணைக்காக மத்திய லண்டன் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுவார்களெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் வீடு வீடாக மேற்படி இடங்களில் நடத்தப்படும் தேடுதல் நடவடிக்கைகள் முடிவடைய சிலகாலம் செல்லுமென அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிரிட்டன் மீது எந்தவிதமான பயங்கரவாத அச்சுறுத்தலும் இதுவரை வராதபோதிலும், இந்த விடயத்தில் மிகவும் கவனமாக இருப்பதாக பிரிட்டன் உட்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

பயங்கரவாத சந்தேகநபர்களாக இதுவரை பிரிட்டனில் 562 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 14 பேரே அமெரிக்காவில் செப்ரெம்பர் 2001 இல் நடந்த தாக்குதலுடன் தொடர்புடையவர்களென உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உலக நோக்கு

### லண்டன் ஹீத்ரு விமானநிலயம் மீதான

## தாக்குதல் திட்டம் தொடர்பாக புலனாய்வு அதிகாரிகள் ஆராய்வு



லண்டனிலுள்ள ஹீத்ரூ விமானநிலையத்தை அல்கொய்டா அமைப்பினர் தாக்குவதற்கு திட்டமிட்டிருந்த தகவல் தொடர்பாக புலனாய்வு அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவல் பாகிஸ்தானில் அல்கொய்டா அமைப்பினருடன் தொடர்புடையவரெனச் சந்தேகிக்கப்படும் நயீம் நூர்கானை கைதுசெய்து விசாரணை நடத்தியபோது தெரியவந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நயீம் நூர்கான் அல்கொய்டா அமைப்பினருக்கு தகவல்களை வழங்கிவருபவரெனவும், இவர் ஹீதரூ விமானநிலயத்தின் வரைபடங்களை வைத்திருந்தவரெனவும் ரைம்ஸ் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

ஆனாலும், ஹீத்ரூ விமான நிலையத்தை தாக்குவது தொடர்பான எந்தவிதமான ஆதாரமும் இருப்பதாக விசாரணையாளர் உறுதிப்படுத்தவில்லையென பாகிஸ்தானிலுள்ள பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

அண்மைய வருடங்களில் ஆறு தடவைகள் நயீம் பிரிட்டனுக்கு விஜயம் செய்திருப்பதாகவும் ஹீத்ரூ விமானநிலையம் தொடர்பாக அல்கொய்டாவின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் தொடர்புகொண்டிருப்பதாகவும் ரைம்ஸ் தெரிவித்தது.

இவரைக் கைதுசெய்ததன் மூலம் அல்கொய்டா தொடர்பான மேலும் ஆழமான தகவல்களைப் பெறமுடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## காஷ்மீரிலுள்ள பொலிஸ்நிலையம்மீது இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகள் தாக்குதல்

### ஒன்பது பொலிஸார் பலி; பலர் காயம்!

இந்திய அரசின் நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீர்ப் பகுதியில் பிரிவினை கோரிப் போராடும் இஸ்லாமியத் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒன்பது இந்தியப் பொலிஸார் கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை காஷ்மீர் மாநிலத்தில் சிறிநகர் நகரில் அமைந்துள்ள மத்திய றிசேவ் பொலிஸ் முகாம் மீது தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில் சில பொலிஸார் காயமடைந்தனர்.

சிறிநகரில் அமைந்திருந்த மத்திய றிசேவ் பொலிஸ் முகாமிற்குள் திடீரெனப் புகுந்த இரண்டு தீவிவாதிகள் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டதுடன், கைக்குண்டுகளையும் வீசித் தாக்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, சம்பவ இடத்திற்கு வந்த கரையோரக் காவற்படையினர் தீவிரவாதிகள் மீது பதில் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாகக் கருத்து தெரிவித்த மத்திய றிசேவ் பொலிஸ் அதிகாரி ஒருவர் இந்தத் தாக்கதல் ஒரு தற்கொலைத் தாக்குதல் எனத் தெரிவித்தார்.

தாக்குதலை தாமே நடத்தியதாக காஷ்மீரில் பிரிவினை கோரிப் போராடிவரும் அல் - மான்சுறைன் என்னும் தீவிரவாத அமைப்பு உரிமை கோரியுள்ளது.

இந்தியாவும், பாகிஸ்தானும் சர்ச்சைக்குரிய பிரதேசமாகிய காஷ்மீர் பற்றிய பேச்சுக்களை ஆரம்பித்திருக்கின்ற இச்சந்தர்ப்பத்தில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் பிரதமர் ராஜபக்ஷவுடன் சந்திப்பு

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை - நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடியதாக, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் 'நமது ஈழநாடு' வுக்குத் தெரிவித்தார்.

நேற்று மாலை 2.30 மணியளவில் நடந்த இந்தச் சந்திப்பில், நாடாளுமன்ற உறுப்பினர்களான- எம்.கே. சிவாஜிலிங்கம், கஜேந்திரன், கனகரத்தினம், ஜெயானந்தமூர்த்தி, அரியநேத்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில், வடமராட்சிக் கடற்பகுதியில் தொடர்ந்தும் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் அத்துமீறி மீன்பிடிப்பது தொடர்வதனால், உள்ளூர் மீனவர்கள் பெருமளவில் பாதிப்படைந்துள்ளதுடன் அச்சமும் அடைந்துள்ளனர். எனவே, இவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன் பிரதமரே நெடுஞ்சாலைகள் அமைச்சராக இருப்பதனால், நெடுந்தீவுக்கான போக்குவரத்திற்குச் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான சகல வசதிகளுடனும்கூடிய படகொன்றினைச் சேவையில் ஈடுபடுத்த அனுமதிக்கவேண்டும். அத்துடன், மாவட்டங்களின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமருடன் கலந்துரையாடினர்.

இவர்களது இந்தக் கோரிக்கையைச் செவிமடுத்த பிரதமர், வடமராட்சிக் கடற்பகுதியில் அத்துமீறும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக உடனடியாகவே கடற்படைத்தளபதியுடன் தொடர்பு கொண்டு, இதற்கான தகுந்த நடவடிக்கையை எடுக்குமாறு பணித்ததுடன், இது தொடர்பாக நேற்று மாலையே இலங்கைக்கான இந்தியத் தூதரைச் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் தெரிவித்தார்.

நெடுந்தீவுப் போக்குவரத்திற்கான படகினைப் புதிதாக சேவையில் ஈடுபடுத்துவது குறித்து சாதகமாகப் பரிசீலிப்பதாகவும் பிரதமர் உறுதியளித்ததாக சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

# மூப்பு அடிப்படையிலேயே பட்டதாரிகள் நியமனம்

## பிரதி நிதியமைச்சர் தெரிவிப்பு

வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கும் அரசாங்கத் திட்டத்தின் கீழ் அரச சேவையில் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் போது, பட்டப் படிப்பைப் பூர்த்திசெய்த வருடத்தின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும் எனப் பிரதிநிதி அமைச்சர் ரஞ்சிற் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வுகளின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் போது எவ்வித பாரபட்சமும் காட்டப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

## 25 சிறுவர்கள் புலிகளால் ஒப்படைப்பு

மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணையச்சென்ற 25 சிறார்கள் நேற்று பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். இந்த நிகழ்வு நேற்றுப் பிற்பகல் மட்டக்களப்பு கரடியனாற்றில் இடம்பெற்றது.

## முழுமையாக...

திபதிக்கு வழங்கிய பாரிய ஆணையை நிறைவேற்றுவதற்கே, இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு விசேடமாக, நாங்கள் ஆரம்பிக்க உத்தேசித்துள்ள பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தலைமைத்துவத்தை வழங்குவதற்கும், அதேபோன்று சமாதானச் செயற்பாடுகளில் முழுமையாக ஜனாதிபதி பங்குபற்றுவதற்காகவுமே அவர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் என மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

## புலிகளின் பிரதேச...

நிலைப்பாட்டிற்குப் பதிலாகவே படைத்தரப்பு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் இது குறித்துத் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளுடனான சந்திப்பு அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான தொப்பிகல காட்டுப்பிரதேசத்தில் ஒழுங்கு செய்யப்பட்டாலும், தாம் அங்கு செல்லத் தயாராக இருப்பதால் மீண்டும் விடுதலைப் புலிகளுடனான மாதாந்த சந்திப்பை வழமை போன்று ஏற்பாடு செய்து தருமாறும்- போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் படைத்தரப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, சகல மாவட்டங்களிலும் தமிழீழ விடுதலைப் புலிகளும், தாமும் அடிக்கடி சந்தித்துக் கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்து தரப்படவேண்டுமெனவும் படைத்தரப்பு வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர்,

படையினரின் இந்த வேண்டுகோளைத் தாம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் விரைவில் தெரிவிக்கவுள்ளதாகக் கூறினர்.

## பால் மா...

நிறுவனம் தெரிவித்தது.

பால்மாவின் விலையை நான்கு அல்லது ஐந்து ரூபாவினால் அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் இருப்பதாக வர்த்தக நுகர்வோர் அலுவல்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இதன்படி பால்மாவின் விலை இன்னும் சில தினங்களுக்குள் நான்கு அல்லது ஐந்து ரூபாவினால் அதிகரிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் காலத்தில் இந்திய நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி 100 ரூபாவிற்குக் குறைந்த விலையில் 400 கிராம் பால்மாப் பைக்கற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (தே)

## டிப்ளோமா பட்டதாரிகளுக்கான பிற மாவட்ட நியமனங்களுக்கு தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம் !

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா ஆகிய கல்வியற் கல்லூரிகளில் இருந்து டிப்ளோமாப் பட்டம் பெற்ற ஆசிரியர்களை வட - கிழக்குத் தவிர்ந்த வேறு மாவட்டங்களுக்கு நியமிப்பதென்ற உயர்கல்வி அமைச்சின் நிலைப்பாட்டை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள தேசிய கல்வியற் கல்லூரிகளில் ஆசிரியர் டிப்புளோமா கற்கை நெறியினைப் பூர்தி செய்த ஆசிரியர்களில் ஒரு தொகுதியினரை வடக்கு - கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் நியமிப்பதற்கு உயர் கல்வி அமைச்சு எடுத்துள்ள தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள தமிழர் ஆசிரியர் சங்கம் உயர் கல்வி அமைச்சின் சிரேஷ்ட துணைச்செயலாளர் எல். அமரசிங்காவைச் சந்தித்து தமது ஆட்சேபனையை தெரிவித்துள்ளது.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கையினை ஏற்றுக் கொண்ட கல்வி அமைச்சின் சிரேஷ்ட துணைச் செயலாளர் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

மேலும், பிற மாவட்டங்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்றத் தேவையில்லையென்றும், தனிப்பட்ட காரணங்களுக்காகப் பிறமாவட்டங்களில் கடமையாற்ற விரும்புவோர் நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்றி நிரந்தர நியமனம் பெறமுடியுமெனவும் தெரிவித்தார்.

## கூட்டணியின்...

சூளுரைத்துள்ளார்.

இதுகுறித்துக் கருத்துக்கூறிய, அரசாங்கப் பேச்சாளர் மங்கள சமரவீர, கூட்டணிக் கட்சிகளுக்கிடையில் எதுவித கருத்து வேறுபாடுகளும் இல்லை என்றும், அநுராவின் கூற்றைத் தான் நிராகரிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும், கட்சியின் புதிய தலைவராக யார் வருவார் என்பது குறித்துக் கருத்தெதுவும் கூற சமரவீர மறுத்துவிட்டார்.

# குடாநாட்டு பாதுகாப்பு...

ரிக்கக் கடற்படைத் தளபதி பங்கு கொண்டதாகத் தெரியவருகிறது.

இதன் பின்னர் குடாநாட்டு சிரேஷ்ட படைத்தளபதிகள் சகிதம் இரண்டு ஹெலிகொப்டர்கள் மூலமாக அமெரிக்கக் கடற்படைத் தளபதி உசன் இராணுவதத்தளத்திற்குச் சென்றார்.

அங்கு 55 ஆவது டிவிஷன் தலைமையகத்தில் பிரிகேடியர் இவர்களை வரவேற்று முகமாலைப் பகுதி முன்னரங்க காவலரணுக்கு அழைத்துச் சென்றார்.

முகமாலை முன்னணிக் காவலரண்கள் மற்றும் சோதனைச்சாவடி ஆகியவற்றைப் பார்வையிட்ட அமெரிக்கப் படைத்தளபதி அங்கு படையதிகாரிகள், சிப்பாய்களிடம் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து கேட்டறிந்ததுடன்

பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் நேரில் பார்வையிட்டார். காலை 10 மணியளவில் முகமாலை பகுதிக்குச் சென்ற இவர்கள் சுமார் ஒரு மணிநேரம் அங்கு நிலைமைகளை அவதானித்துவிட்டு திரும்பினர்.

பின்னர் இவர் காரைநகர் கடற்படைத்தளத்துக்கு விஜயம் செய்து கடற்படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதுடன் கடற்படை நடவடிக்கைகளையும் நேரில் பார்வையிட்டார்.

காங்கேசன் துறைமுகத்தையும் பார்வையிட்ட அமெரிக்கக் கடற்படைத்தளபதி, பின்னர் பலாலியிலிருந்து கொழும்புக்குத் திரும்பினார்.

அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் பிராந்தியத் தளபதி நேற்று முன்தினம் கொழும்புக்கு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இவர் நேற்று முகமாலைப் பகுதியைப் பார்வையிட்ட போது ஏ-9 வீதியூடாக போக்குவரத்துக்கள் முற்றாகத் தடை செய்யப்பட்டன. காலை 10 மணி முதல் 12 மணிவரை மிருசுவிலுக்கப்பால் பொதுமக்கள் அனுமதிக்கப்படவில்லை . அத்துடன் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளிலும் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது.

அண்மையில் செய்து கொள்ளப்பட்ட துறைமுகங்கள் பாதுகாப்புத் தொடர்பான ஒப்பந்தத்திற்கமைய துறைமுகங்கள் பாதுகாப்பினைப் பலப்படுத்துவது, அமெரிக்கா வழங்கவுள்ள கடற்படைக் கப்பலை சேவையில் ஈடுபடுத்துவதற்கான திட்டங்கள் மற்றும் அங்குள்ள பாதுகாப்பு நிலைமைகள் குறித்து முழுமையாக மதிப்பீட்டறிக்கை தயாரிப்பது ஆகிய நோக்கங்களுக்காகவே இவர் இலங்கை வந்ததாகத் தெரியவருகிறது.

## நாடாளுமன்றத்தில்...

இதன்போது - அநுராபண்டாரநாயக்கவின் கருத்துக்குப் பதிலளிக்கச் சந்தர்ப்பம் தருமாறு சபாநாயகரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் வேண்டுகோள் விடுத்தார்.

ஆனால், இதற்குச் சந்தர்ப்பம் அளிக்கமுடியாது என சபாநாயகர் தெரிவித்தார்.

பின்னர் - நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தான் அநுராவின் பேச்சினை ஒழுங்குப் பிரச்சினையாகக் கருதுவதாகவும், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான தான் விபத்திலே நாடாளுமன்றத்துக்கு தெரிவானதாக அநுரா பண்டாரநாயக்க தெரிவித்த கருத்துக்களை ஹன்சாட் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதற்குச் சபாநாயகர் மறுப்புத் தெரிவிக்கவே, தனது ஆட்சேபத்தினை தெரிவிப்பதற்காக சிவாஜிலிங்கம் நேரே சபாநாயகர் இடத்திற்கு விரைந்து சென்றார்.

இதை அவதானித்த ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா, சிவாஜிலிங்கத்தைத் தாக்குவதற்காக ஓடி வந்தார்.

உடனே தன்னைச் சுதாகரித்துக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தன்னைத் தாக்கினால் தானும் மேவின் சில்வாவைத் தாக்கப்போவதாக எச்சரிக்கை விடுத்தார். இதனையடுத்து இருவருக்குமிடையே கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

பின்னர் - ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் கூட்டமைப்பினர் இருவருக்குமிடையேயான வாய்த்தர்க்கத்தை நிறுத்தி சமாதானம் செய்ய முற்பட்டனர். இந்தநிலையில் சிவாஜிலிங்கத்தினை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்ற வேண்டுமென அநுரா பண்டார நாயக்க கோரிக்கை விடுத்தார்.

இதனை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆட்சேபித்த போது - மீண்டும் மன்றில் அமளி துமளி ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து நேற்றைய நாடாளுமன்ற அமர்வுகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன.

## இடைக்கால...

கான ஒரு நிரந்தர இறுதித் தீர்வுடன் இணைக்கப்பட்டதும், தொடர்புடையதுமான பேச்சுவார்த்தையாக அமைய வேண்டுமென்ற நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்றும் அவர் மேலும தெரிவித்தார்.

இதேவேளை - ஜனாதிபதி சந்திரிகா, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளதையடுத்து, நேற்று ஜே.வி.பி வெளியிட்டுள்ள இந்த அறிவிப்பு, சந்திரிகாவை மீண்டும் கட்சித்தலைவியாகத் தக்கவைப்பதற்காகவா அல்லது உண்மையில் பேச்சவார்த்தை ஆரம்பிக்கப்படுவதை விரும்பியா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.